"MATHAR MARUMANAM."

மாதர் மறுமணம்



மலர் 3. இதழ் 4.

வெகுதானிய கார்த்திகை.

Annas 1½. 10 Cts.

"மாதர் மறுமணம்"
விற்பனை ஏஜெண்டுகள்.

1. இந்தியன் நாஷனல் நியூஸ் மார்ட், 89 சர்ச் ஸ்ட்ரீட். ஸ்லேவ் அயலண்ட், கொழும்பு.
2. நியூஸ் மார்ட் சப் ஏஜெண்ட், 8, 9 வார்ட் ஸ்ட்ரீட், கண்டி.
3. நவீன கதா புத்தகசாலை, மங்கமாரி வீதி, ரங்கூன்.
4. மு. முகம்மதலி, 208-A சிலிகி ரோடு, சிங்கப்பூர்.

"மாதர் மறுமணம்" சந்தா விபரம்.

வருஷ சந்தா இந்தியா, சிலோன் முதலிய உள்நாட்டுக்கு	...	ரூ.	1—0—0
பர்மா, மலாயா, சைகோன், தென்னாபிரிக்கா முதலிய வெளிநாட்டுக்கு	...	ரூ.	1—8—0
தனிப்பிரதி	... ...	ரூ.	0—1—6

வி. பி. மூலம் அனுப்ப இயலாது. முன்பணமாகவே செலுத்த வேண்டும். வெளிநாட்டிலுள்ளவர்கள் 2 ஷல்லிங் 6 பென்ஸ் அனுப்ப வேண்டும்.

விலாச மாறுதலுக்கு சந்தா எண்ணைக் குறிப்பிட்டு கடிதமெழுதவும். மாதிரிப்பிரதி வேண்டுவோர் 1½ அணா ஸ்டாம்பு அனுப்பவேண்டும்.

காரியதரிசி,
மாதர் மறுமண சகாய சங்கம், காரைக்குடி.

உள்ளுறை

காலத்தேர் (பாட்டு)

—சுவாமி சுத்தானந்த பாரதியார் 1

விதவைகளின் துயர் 2

மாதர் மறுமணத்தின் அவசியம்

—குலவந்தராய் ஜயினர் 4

மடமையைக் கொளுத்துவோம் (பாட்டு)

—M. R. பழனியப்பன் 7

வீரத்தாய்மார் வேண்டும்—திரு. S. முனிசாமி பிள்ளை 8

கோமள விமோசனம் —A. லூட்ஸ் 11

புதுமைப் பெண் —ஸ்ரீமதி அம்மு சுவாமிநாதன் ... 18

ஓம் மண்டலி ... 21

பெண்களும் கல்விப் பிரசாரமும் 25

எதிர்பாராதது —ப. நீ. 29

விதவைக்கு விமோசன மளியுங்கள்

—ந. மு. ரே. ராமச்சந்திரன் 34

தாயும் தாய்நாடும் —ஜங்கிதாஸ் 36

பத்திராதிபர் குறிப்புகள் ... 41

நிகழ்ச்சிகள் 44

குமரன் புத்தகசாலை.

வ. உ. சிதம்பரம் பிள்ளை எழுதியது.

மனம்போல வாழ்வு	0-8-0
திருக்குறள்(அறத்துப்பால்)	1-0 0
மெய்யறம்	0-8-0
சாந்திக்கு மார்க்கம்	0-8-0
அகமே புறம்	0-8-0
மெய்யறிவு	0-8-0

வ. வே. சு. ஐயர் எழுதியது.

சந்திரகுப்த சரித்திரம்	0-6-0

மகேசகுமார சர்மா எழுதியது.

வால்மீகி விஜயம்	0-12-0

இதர புத்தகங்கள்

ஞான வாசிட்ட மூலமும் உரையும் 2 பாகமும்	6-0-0
நைடதம் மூலமும் உரையும்	4-0-0
சிதம்பர ரகசியம்	0-8-0
உப்பள முற்றுகை	0-4-0
பக்தியோகம்	0-8-0
தேவோபாசன தீபம்	0-6-0
பங்கஜம் அல்லது பார்ப்பனக்கொடுமை (சீர்திருத்தக்கதை)	0-4-0
மநுநீதி மர்மம்	0-2-0
ரோமியோ ஜூலியட் (ஷேக்ஸ்பியர் நாடகக் கதை செய்யுள்)	0-4-0
இகபரஞானசாகரத் திரட்டு	0-6-0
பெரிய விக்கிரமாதித்தன் கதை	1-0-0
தாசிகள் மோச வலை (நாவல்)	1-4-0
நந்தனார் கீர்த்தனை	0-4-0
தோத்திரக்கோவை	0-6-0
இராமாயண ஆராய்ச்சி	0 4-0
சொர்னவல்லி	0-12-0
கூழைரங்கன்	0-12-0
அமிர்தவல்லிமாலை	0-4-0
நமது பலசரக்குக்கடை	0-6-0
நாயன்மார்	0-3-0
குட்டிச்சாத்தான் கட்டுரைகள்	0-3-0
பதிற்றுப்பத்தந்தாதி	0-3-0
மாதர் மறுமணம்	0-4-0
பத்மநாதன் அல்லது களவு போன வைரப்பதக்கம்	0-12-0
மானநஷ்ட வழக்கு	0-1-0
ஜீவகாருண்யத்திருக்குறள்	0-0.6
ஜீவகாருண்யப் பாடல் திரட்டு	0-3-0
சந்திரமதி அல்லது தற்காலத்து தமிழ் மகள்	0-2-0
கைம்பெண்ணின் கண்ணீர்	0-1-0
தேசீய கீதங்கள்	0-2-0
காசில்லாமல் உபதேசம்	0-1-0
பலதிரட்டு	0-1-0
கடவுளும் கோயிலும்	0-1-0
சமரச சன்மார்க்க தோத்திரத்திரட்டு	0-4-0
சைவசமய சாரம்	0-1-0
சுயராஜ்யம் யாருக்கு	0-1-0
மாதர் மறுமணம் பாடல் திரட்டு	0-2-0
அநியாயக் கல்யாணம்	0-0-6
இரண்டு கட்டுரைகள்	0-1-0
தமயந்தி நாவல்	0-8-0
சோதிடப் புரட்டு	0-2-0
சுயமரியாதைத் தாலாட்டு	0-2-0
புராண ஆபாசங்கள்	0-3-0
ராமலிங்க சுவாமி பாடல்	0-2-0
சுயமரியாதைத் தத்துவ கீதங்கள்	0-3-0
சுயமரியாதைப் பாடல்	0-2-0

மானேஜர், 'குமரன்' ஆபீஸ், காரைக்குடி.

மாதர் மறுமணம்.

பத்திராதிபர்:— மு. மரகதவல்லி.

மலர் 3	காரைக்குடி வெகுதானிய-ஹு கார்த்திகைமீ	இதழ் 4

காலத் தேர்.

(சுவாமி சுத்தானந்த பாரதியார்)

அன்பென்னும் வீதியிலே செல்லுந் தேரே—எங்கள்
ஆசைச் சங்கிலிகளால் உன்னை யிழுப்போம்
துன்ப முட்டுக் கட்டைகள் என்ன செய்யும்?
சுதந்திரச் செருக்குடன் ஓடு தேரே!
வம்பரின் வாயடங்கச் சங்கு முழங்கும்—புது
வாழ்வென்னும் பல்லியங்கள் முழங்கிடுவோம்.
கம்பரும் வள்ளுவருங் காத லிசைத்தார்—அந்த
காதலிசைக் கேற்றபடி ஓடு தேரே!

காலத்தேரே, புதுக் காலத்தேரே—தடைக்
கற்களை யுடைத்துமுன்செல் காலத்தேரே!
ஞாலத்தேரே சேமம் நல்கு தேரே—பல
நல்லகலை வளம்பெற்ற செல்வத்தேரே!
சீலமுள்ள தம்பதிகள் ஒற்றுமையுடன்—உன்னைச்
சேர்ந்திழுக்க வந்து நின்றோம் செயமுடனே.
கோலத் தேரே வெற்றி கொள்ளுந் தேரே—ஒரு
குலமென மாந்தரெல்லாம் உன்னை யிழுப்போம்.

மனவுரங் கொண்டுவந்தோம் காலத்தேரே—இனி
மங்கலமாய் நிலை சேர்ப்போம் காலத்தேரே
தினமும் சுயேச்சை வழி சென்று நிமிர்வோம்—வருந்
தீமையெல்லாம் பொடியாக்கிச் செல்லுதேரே!
அனைவரும் சமமென்ற கொட்டு முழக்கி—ஆண்பெண்
அஞ்சாத வீரமுடன் ஆத்ம பலத்தால்,
மனையறந் தாங்கியொளிர் மாந்தருக்கெல்லாம்—இன்ப
வாழ்வு வளருநிலை வந்து சேராய்.

காலத்தேரே—நல்ல
காலத்தேரே—நாங்கள்
கலந்துன்னை யிழுக்கின்றோம்
காலத்தேரே!

விதவைகளின் துயர்

ஹிந்தி பாஷையில் மிகப் பாண்டித்தியம் உடையவரும், சீர்திருத்த வாதியுமான பண்டித ஈசுவர சந்திர வித்யாசாகர், விதவைகளின் துயரைப்பற்றி இவ்வாறு எழுதி இருக்கிறார்:—

தேசமக்களே! நீங்கள் இதுவரைக்கும் கொண்டிருந்த மூட நம்பிக்கைகள் போதும். தர்ம காரியங்களுக்கு நடுநாயகமாக விளங்கிய உங்களுடைய பாரததேசம், விபசாரம் முதலிய துஷ்காரியங்கள் நிறைந்ததோர், விளையாட்டு மண்டபமாக மாறிவிட்டது. நீங்கள் இருக்கும் நிலைமையைப் பார்த்தால் மிகவும் பரிதாபகரமாயிருக்கிறது. சாஸ்திரங்களில் சொல்லப்பட்டிருக்கும் நுட்ப விஷயங்களை உணர்ந்து கொள்ளுங்கள். பின்னர் அதன்படி நடக்க முயலுங்கள். அப்பொழுதுதான் உங்கள் தேசத்திற்கு ஏற்பட்டிருக்கும் அபகீர்த்தியை உங்களால் துடைக்க முடியும். ஆனால் உங்களின் நிலைமையைப் பார்த்தால் எனக்கு மிகவும் அவநம்பிக்கை உண்டாகின்றது. ஏனெனில் நீங்கள் பழங்காலத்துக்கொள்கைகளுக்கு முற்றும் அடிமையாய் போய்விட்டீர்கள். அவைகளையே நீண்டகாலமாகப் பின்பற்றிக் கொண்டும் வந்திருக்கிறீர்

கள். இப்பழக்கம், நன்மையென்ன, தீமையென்ன, என்பதைப் பகுத்தறிந்து கொள்ளும் சக்தியைக் கொன்றுவிட்டது. இதனால் அநுபவ அறிவும் புத்தியும் மங்கிப்போய் விடுகின்றன. உதவியின்றி பரிதவித்துக் கொண்டிருக்கும் விதவைகளுக்கு உதவி செய்தற்கு உங்கள் உள்ளத்தில் கருணை பிறக்கமுடியால் செய்துவிட்டது. எத்தனையோ பெண்கள் இயற்கை யுணர்ச்சியால் தூண்டப்பெற்று, வைதவ்ய விரதம் என்பதை விட்டொழித்து, வாழ்க்கை நடத்துகிறார்கள். இதைப் பாராமல் கண்ணை மூடிக்கொண்டிருப்பது உசிதம் என்று எண்ணுகின்றீர்கள் போலும். நீங்கள் இவ்வாறு கண்மூடித்தனமாய் இருப்பது பாவத்தையும் விபசாரத்தையும் வளர்ப்பதற்கு உதவி செய்வது போலாகும். உலகம் பழிக்குமே என்ற சொல்லிற்காகப் பயந்து, சத்தியத்தையும் தர்மத்தையும் அடியோடு நசுக்கியவர்களாவீர்கள். புனர்விவாகம்செய்துகொள்வதற்குச்சாஸ்திரங்களில் இடமிருக்கிறது. புனர்விவாகம் செய்து கொள்வதனால் பெண்கள் அநேக துன்பங்களிலிருந்து விடுதலையடைகிறார்கள். நீங்களும் எல்லாவிதமான குழப்பங்கள், பாவம் முதலியவற்றினின்றும் தப்பித்துக் கொள்ளமுடியும். இவ்வாறு எல்லோருக்கும் பலவழிகளில் நலம் தரும் விதவைமணத்தை, அநுஷ்டானத்திற்குக் கொண்டுவர முயற்சியில்லாமல் இருப்பது எனக்கு மிகவும் ஆச்சரியமாக இருக்கிறது.

கணவன் இறந்ததும், பெண்களின் உள்ளம் உடலமைப்பு இரண்டும் மாறிவிடுவதாக நீங்கள் எண்ணிக் கொண்டிருக்கிறீர்கள் போல் தோன்றுகிறது. இதனால் பெண்களுக்கு காம உணர்ச்சியில்லாமல் போய்விடும் என்றும் நம்பிக்கொண்டிருக்கலாம். இவையிரண்டும் உண்மையல்லவென்று நடைமுறையில்—நித்தியவாழ்க்கையில்—நமக்கு பிரத்தியக்ஷமாய் தெரிகிறது. உயிர் விருக்ஷமாகிய பெண்களை நீங்கள் இவ்வாறு நடத்துவதனால், உயர்ந்த கனிகளுக்குப்பதிலாக நஞ்சு உடைய கனிகளைப்பெற்றுக்கொண்டிருக்கிறீர்கள். அன்பர்களே! இவ்விஷயத்தைப்பற்றி சிந்திக்க சிந்திக்க என் மனம் மிகவும் வருத்தம் அடைகிறது. எவ்வளவுதூரம் வருத்தப்பட்டபோதிலும் அது எனக்குக் கொஞ்சமாகவே தோன்றுகிறது. எங்கு மனிதர்களிடத்தில் தயையும் கருணையும் இல்லையோ, எங்கு

உசிதம், அநுசிதம் என்பதைை அறிந்துகொள்ளும் ஆற்றல் இல்லையோ, எங்கு புண்ணியத்திற்கும் பாபத்திற்கும் உள்ள வேற்றுமையை உணர்ந்து கொள்ளமுடியாதபடி புத்திகெட்டுப் போயிருக்கின்றதோ, எங்கு மனிதர்கள் மூடபழக்கங்களை, சுயஉணர்வின்றிப் பின்பற்றுவதே தங்களின் கடமையென்று எண்ணிக் கொண்டிருக்கிறார்களோ, அந்த தேசத்தில், ஏ பரமாத்மா, நீ, பெண்களை உற்பத்தியாகாமல் தடுத்துவிடவேண்டும்! பெண்மணிகளே நீங்கள் என்ன பாபம் செய்தீர்களோ தெரியவில்லை இந்த பாரத தேசத்தில் வந்துபிறந்திருக்கிறீர்கள்.

மாதர் மறுமணத்தின் அவசியம்

(குலவந்தராய் ஜயினர், இளஜப்பூர்)

1. மனைவி இறந்ததும் கணவன் மறுமுறை கலியாணம் செய்துகொள்ள உரிமையிருக்கும் போது, கணவன் இறந்ததும் மனைவி அவ்விதம் செய்து கொள்வதற்கு அதிகாரமுண்டு. சீதையைப்போல், தங்களின் மனைவிமார்கள் ஏக நாயகனையே விரும்ப வேண்டும் என்ற எண்ணமுடைய ஆண்கள், அவசியம் ராமனைப் போல், ஏக பத்தினி விரதத்தைக் கைக்கொண்டு ஒழுகுதல் அவசியமாகும்.

2. இயற்கையில் ஆண்களும் பெண்களும் சம எண்ணிக்கையாகவே பிறக்கிறார்கள். கன்னிப் பெண்களை, கிழவர்கள் மணஞ் செய்து கொள்கிறபடியால், அநேக இளைஞர்களுக்குப் பெண் கிடைக்காமல் போய் விடுகிறது. இதனால் கலியாணமாகாத இளைஞர்களும் விதந்துவாய்ப் போன பெண்களும் விபசாரத்தில் ஈடுபடுகிறார்கள். இது சமூகத்திற்கு மிகவும் தீமை பயக்கும்.

3. காம சாஸ்திரங்களில் பெண்களுக்கு, காம உணர்ச்சி எட்டு மடங்கு அதிகம் என்று சொல்கின்றனர். இது உண்மையானல் பெண்கள் விதந்துவானதும் பிரமசாரிகளாய் இருக்க வேண்டுமென்று எதிர்பார்ப்பது மகா பாதகமாகும்.

4. சமூக அமைப்பில் பெண்கள் தாங்களே பொருள் சம்பாதிக்கும் தன்மையில்லாம லிருக்கிறபடியால், அவர்கள் உணவிற்கும் உடைக்கும் ஆண்களையே நம்பி இருக்க வேண்டியதிருக்கிறது. சமூகமும் உறவினர்களும் விதவைகளைப்பரிபாலிக்க முடியா விட்டால், மறுமணம் செய்து கொடுப்பதைத் தவிர வேறு வழியில்லை.

5. இந்தியாவில் இதுவரைப் பெண்களுக்கு, நல்ல முறையில் கல்வி போதிக்கப்படவில்லை. ஆகையால் பிறருடைய உதவியின்றி வைதவ்விய விரதத்தை அனுஷ்டிக்கவோ, அல்லது தங்களின் மனதைப் பரோபகாரவழிகளில் செலுத்தவோ முடியாது. இதனால் மனம் கெட்டு விடுவதுடன், அமைதியாகவும் வாழ்க்கை நடத்த முடிவதில்லை.

6. சமூகத்திற்குத் தெரியாமல், எவ்வளவு வருஷங்கள் வேண்டுமானாலும் ஒரு ஆண் விபசாரம் செய்து கொண்டிருக்க முடியும். ஆனால் பெண்களால் அவ்விதம் செய்யமுடியாது. தப்பித் தவறி விபசாரம் செய்து கர்ப்பவதியாகி விட்டால், சமூகம் அவளைப் பழிக்கிறது. அதனால் பெண்கள் சில சமயம் தற்கொலை செய்து கொண்டுவிடுகிறார்கள். ஆகையால் இளம் விதவைகளை மணஞ்செய்து கொள்ளும்படியாக ஏற்பாடு செய்ய வேண்டும். அதனால் யாதொரு தீங்கும் நேராது.

7. சமூகத்தில் மறைமுகமாக விபசாரம் பரவுவதற்கு வழியிருக்கிறபடியால் தற்கொலை, சிசுக்கொலை, கர்ப்பச்சிதைவு முதலியன நிகழ சந்தர்ப்பமிருக்கிறது.

8. ஹிந்துமதத்தில் விதவை மணம் செய்துகொள்ள இயலாதபடியால், அனேகம் பெண்கள், கிரிஸ்துவ, முகமதிய மதங்களிற் போய் சேருகின்றனர். இதனால் ஹிந்து சமூகத்தில் பெண்களின் எண்ணிக்கை குறைந்துகொண்டு வருகிறது.

9. இந்தியாவில் ஆதி காலத்தில் 'சதி' எனும் பழக்கம் இருந்தபடியால், விதவா விவாஹம் என்ற பேச்சுக்கே இடமில்லாமல் போயிற்று. அதனால் இந் நாட்டில் விதவைகளின் எண்ணிக்கை

பெருகிக்கொண்டு வருகிறது. ஆகையால் விதவைகளை அலட்சியம் செய்து, சும்மாயிருக்கலாமென்பது இனிமேல் சாத்தியமில்லை.

10. பிரமசரிய முறையை அநுஷ்டிக்க முடியாத விதவைகளிடத்தில், அதை வற்புறுத்துவதினால் அவர்களின் உடல் நலம் கெட்டுப்போய் விடுகிறது.

11. சமூகத்தில் விதவைகளை வெறுப்போடு நோக்குகின்றார்கள். அதனால் பெண்கள் கேவலமாய் நடத்தப்படுகிறார்கள். விதவை மணஞ் செய்தால், இவையிரண்டும் இல்லாமல் போய்விடும்.

12. வறுமை மிகுந்துள்ள இக் காலத்தில், விதவையை மணம்செய்து கொடுப்பதால் மாமன், மாமி, கொழுந்தன், தாய், தகப்பன் முதலியோர் விதவையைக் காப்பாற்றும் பொறுப்பிலிருந்து விடுதலை அடைகிறார்கள்.

13. இதனால், விபசாரமும், அதே போலுள்ள இன்னும் அனேக குறைகளும் படிப்படியாக இல்லாமல் போய்விடும்.

14. விதவா விவாகம் செய்து கொள்வதனால், அவமதிப்பிற்குப் பதிலாக, பெண்களுக்கு மரியாதையும் கௌரவமும் அதிகமாகும்.

15. விதவைகளின் துன்பத்தைப் போக்குவதால், நாட்டில் அஹிம்சை பரவும்.

விண்ணுக்குப் பறப்பது போற் கதைகள் சொல்வீர்
விடுதலை யென்பீர், கருணை வெள்ள மென்பீர்,
பெண்ணுக்கு விடுதலைநீ ரில்லை யென்றால்
பின்னிந்த வுலகினிலே வாழ்க்கை யில்லை

—பாரதி

கருணை உள்ள இடத்தில் - விதவை இல்லை.

சிவகுருநாதன்,
செந்தமிழ் நிலயம்.
கும்பகோணம்.

மடமையைக் கொளுத்துவோம்

(M. R. பழனியப்பன். கொழும்பு.)

ராகம் பிலஹரி .... தாளம் சாபு

பல்லவி

மாதர் மறுமணமே மஹாத்மா காந்தி
மகிழ நடத்திடுவோமே

சரணம்

1. கைம் பெண் கவலையைக் கண்டு உலகோர்கள்
வெம்புவதே வழிஎன்றெனக் கொண்டார்கள்
துன்ப நரகமாம் படுகுழி வீழாமல்
அன்புள்ள நங்கையர் ஆர்வத்தைக் கொய்
[யாமல் (மாதர்)

2. விதவையர் துயரதனை நீக்குவீர்—அவர்
விரும்பும் மணாளனை ஊக்குவீர்
மறுமணக் கொள்கையைப் போற்றுவீர்
மடமையர் உள்ளத்தை மாற்றுவீர் (மாதர்)

3. சக்தியின் மனதிற்கு உகந்ததே—மற்ற
சம்ஸார வாழ்க்கைக்கு நிகழ்ந்ததே
பற்றுள்ள பெரியார்கள் பகர்ந்ததே
பாவையர் உள்ளத்தைக் கவர்ந்ததே (மாதர்)

வீரத் தாய்மார் வேண்டும்

(தென்னுப்பிரிகா—டர்பன் திரு. ச. முனிஸ்வாமி பிள்ளை)

"அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்" என்று நாம் சொல்லுகிறோம். "தாயின் பாதத்தை முத்த மிடுகிறவன் சுவர்க் கத்துக்குப் போகிறான்" என்றார் முகம்மது நபி. குழந்தை வளர வளர யோக்யனாய்ப் போவதும், அயோக்யனாய்ப் போவதும் வீர முள்ளவனாவதும், பயங்கொள்ளியாவதும், தாயையே முற்றும் பொறுத்திருக்கிறது. தாய்க்கு அத்தனை சக்தியிருக்கிறது. அவளே ஒருவனை மாணிக்கவாசக ராகவும், அரிச்சுனனாகவும், அரிச்சந் திரனாகவும், ஆக்கிவிடலாம். அவளே ஒருவனை டம்பாச்சாரியாக வும் துரியோதனனாகவும் தேசத்துரோகியாகவும் செய்து விடக் கூடும். தாய்மார் மாத்திரம் தங்களிடம் பரம கருணாநிதியால் வைக்கப்பட்டுள்ள இந்த அபார சக்தியை, தங்கள் மக்களின் அறிவையும் குணத்தையும் மலரச்செய்து, தேசபக்த வீரதீர சிங் கங்களாய் ஆக்குவதில் உபயோகப்படுத்தி வருவார்களானால், நமது நாட்டிலுள்ள வறுமையும் துக்கமும் அடிமையும் பஞ்சாய்ப் பறந்துவிடும்.

குந்திதேவியின் அபார சக்தியன்றோ பாண்டவர்களை பரிம ளிக்கச் செய்தது? தாய்மார்களன்றோ யோக்யர்களையும் தர்மாத் மாக்களையும் வளர்த்திருக்கிறார்கள்? ஆனால் சென்ற இரண்டு தலை முறைகளாக நம்முன், உலகத்தாரின் கண்முன்னே, நாம் பெருமை பாராட்டிக்கொள்ளத் தகுந்த தர்ம வீரர்கள் தகுந்த அளவுக்குத் தோன்றவில்லை. ஒரு போஸும், ஒரு ராமனும், ஒரு ராயும், ஒரு தாகூரும், ஒரு மகாத்மாவும் தோன்றியதால் நமது விரிந்த நாட்டுக்குத்தேவையான வீரர்கள் இருப்பதாகப் பெருமை பாராட் டிக்கொள்ள முடியுமா? தருமம் நாட்டில் குன்றிப் போய்விட் டது. நாட்டில் வீரியம் இல்லை. நாட்டில் சிறுமையும் அடிமையும் போலியும் பெருகிவிட்டன. வரும் தலைமுறையில் வீரியம் வளர வேண்டுமானால், நம் நாட்டுப் புருஷர் மற்றை நாட்டவர்க்குச் சரி சமத்வமாய் நிற்கவேண்டுமானால், நம் நாட்டு அடிமை ஒழிய வேண்டுமானால், பாரத நாடு முன்னாளில் பெற்ற பேறும் பெற

வேண்டுமானல் இப்போது தேசத்தில் இன்னும் வீரத்தாய்மார் வேண்டும்.

"தொட்டில் பழக்கம் சுடுகாடுமட்டும்." ஆகையால் கைக்குழந்தையாயிருக்கும் போதே குழந்தையின் பழக்க வழக்கங்களைக் கவனித்து நல்ல வழக்கங்களும், தேசபக்தியும் வீரத்தன்மையும், அஞ்சா நெஞ்சமும் ஏற்படும்படி உன்னிப்பாய் பார்த்துவர வேண்டும். குழந்தைகளுக்கு வசைச் சொல் பழக்குவதில் தாய்மாருக்குண்டாகும் பூரிப்புக் களவில்லை. இது மிகுந்த மதியீனம். பால்யத்தில் பழகின வசைச்சொல் பசுமரத்தாணி போல் மனதில் பதிந்து விடும். குழந்தையைப் பயமுறுத்தி விடுவது நம்முள் ஒரு துர்வழக்கம். தாய்மார் ஊட்டும் ஆகாரத்தை அது சாப்பிடாமல் போனுல் அல்லது விஷமம் செய்தால் 'பூச்சாண்டி வருகிருன்!' என்று பயமுறுத்தி விடுகிருர்கள். அந்த நிமிஷத்தில் அவ்வாறு சொல்வதால் தொந்திரவு குறையலாம்; ஆனுல் குழந்தை ஆயுள் பரியந்தம் பயங்கொள்ளியாய் விடுகிறது.

வீஷ்மர், பரதன், பாண்டவர் இவர்கள் தாய்மார்களால் தன்னந்தனியே புலி, கரடி, சிங்கம், முதலிய துஷ்ட மிருகங்கள் வாழும் வனத்தில் வைத்துப் பராமரித்ததினுலன்ருே அஞ்சா நெஞ்சம் படைத்து, தோள்வலிபெற்ற சிங்கங்களாய் விளங்கினுர்கள்? தாய்மார்கள் அல்ப சல்லியங் குறைவதற்காகக்குழந்தைகளைப் பயங்கொள்ளிகளாக்கிக் கெடுத்து விடுகிருர்கள். ராஜீய தேசீய விஷயங்களில் ஈடுபட்டு உழைக்கும் பெரும்பாலர் உத்தியோகஸ்தர்களின் மிரட்டல்களுக்குப் பயந்துபோய் நியாயக் கக்ஷியை விட்டு விடுகிருர்கள். இதனுலேயே "சர்க்கார் கோழிமுட்டை, குடியானவன் அம்மிக்கல்லை உடைக்கும்" என்று வழங்கலாயது.

இதற்குக் காரணம் சிறுமையில் அவர்கள் உள்ளத்தில் புகுத்தி வளரவிட்டபயம் என்ற பேயே. குழந்தை துஷ்டனுய் அடங்காப் பிடாரியாய் போனுலும் போகட்டும், பயங்கொள்ளியாய் செய்து விடாதீர்கள். பீமசேனனுக்குப் பால்யமுதல் சண்டையில் பிரியம். நெப்போலியனுக்கு 'முடியாது' என்ற பதம் அகராதியில்கூட இல்லை. ஸ்பார்த்தா (கிரேக) வில் மனவுறுதி காட்டாத குழந்தை

களை ஜாதியிலேயே சேர்த்துக்கொள்ள மாட்டார்கள். கேவலம் குரங்குகூட தன் இனத்தில் ஏதேனும் ஒரு குட்டியாயினும் கொம்பு விட்டுக் கொம்பு தாவும்போது கீழேவிழுந்துவிட்டால் அதை மற்ற குரங்குகள் சேர்ந்து கொன்றுவிடும். ஜப்பானிய சாமுராயர்கள் தங்கள் வீட்டுப் பிள்ளைக்கு ஐந்து பிராயம் முடிந்ததும் தனியே சுடுகாட்டுக்குச் சென்று எலும்புகளைப் பொறுக்கிவரச் சொல்லு வார்களாம். நம் தாய்மார்களும் தங்கள் குழந்தைகளை சிவாஜி யைப் போலவும், தேசிங்குபோலவும், அர்ச்சுனன், அபிமன்யூ போலவும், திருநாவுக்கரசு, மகாத்மாபோன்ற சத்தியாக்கிரக ளாகவும், விவேகானந்தா, சிரத்தானந்தா போன்றவர்களாயும், நிர்ப்பயர்களாய், தீரர்களாய், சுதந்திரப் பிரியர்களாய் இருக்க வேண்டுமென்ற நோக்கத்தோடு வளர்த்தார்களானால் நாட்டில் தீரம் பெருகும் கோழைத்தனம் குன்றும். அவர்களுக்கும் வீரத் தாய்மார் என்ற பேரும் உண்டாகும்.

தாய்மார் குழந்தைகளுக்குப் புகட்டும் பாலுடன் "நீ சிவாஜி வம்சத்தில் தோன்றியவன், பராசரரின் வம்சவழி வந்தவன், வள் ளல் எழுவரின் வழி வந்தவன், கூலி முதுகிற் சோறிட்ட வேளாளர் குலத்தில் தோன்றியவன். அடிமையை ஒழித்த கலுழன் கால்வழி வந்தவன். நீயே சிங்கம், நீயே பாக்கியசாலி, நீயே குபேரன், நீயே பராக்கிரம சாலி" என்ற இன்னோரன்ன வீரமொழிகளால் தீரத்தைப் புகட்டுவார்களானால் அவர்கள் பிற்காலத்தில் தாய்மார் களின் வீரமொழிகளுக்கேற்ப வீரதீர சம்பத்துடன் விளங்கு வதில் தடையுண்டோ? தாய்மார்களே! உங்களிடம் சக்தியிருக்கி றது. உங்களால் முடியாதது ஒன்றுமில்லை. உங்கள் மக்கள் அடிமை யினின்றும் நீங்கி சுதந்திர சிங்கங்களாக வேண்டுமென்கிற எண் ணம் உங்கள் உள்ளத்தில் உதித்து விட்டால் அன்றே நம் நாடு க்ஷேமமடையும்; அன்றே சுதந்திரம் பெருகும்; அன்றே அடிமை அருகும்; அன்றே செல்வம் ஓங்கும். சிங்கத்தின் வயிற்றில்தான் சிங்கம் தோன்றும். நீங்கள் கோழைகளாயிருந்தால் உங்கள் வயிற்றில் பிறக்கும் குழந்தைகளும் பேடியாய்த்தானிருக்கும். நீங்கள் பாண்டவர்களை வளர்த்த குந்திதேவியாய் விளங்குங்கள். சிவாஜியைப்பெற்ற ஜீஜீபாயாய் தோன்றுங்கள். ருக்மணியாகவும்

சுபத்திரா தேவியாகவும் சுதந்திரப் போருக்குத் தயாராக ஆருங்கள். நீங்கள் மனம் வைத்தால் ஆகாதது ஒன்றுமில்லை. மகன் யுத்தரங்கத்தில் இறந்தானெனக் கேட்ட தாய் கையும் வாளுமாய் யுத்தகளத்துக்குச் சென்று மகனைத்தேடி எடுத்து மகன் முன் வடுப்படாது பின் வடுப்பட்டிருப்பதைக் கண்ணுற்றதும் புறமுதுகிட்டோடி யிறந்த மகனுக்குப் பால் கொடுத்த ஸ்தனத்தைக் கைவாளால் சேதித்தெறிந்ததாகக் கேட்டதும் நமது தாயன்றோ!

ஆகவே நம் நாடு முன்னேற்றமடையுமாறு கிருபை பாலித்து வீரதீர சிங்கங்களைப்பெற்று நாட்டைக் கைதூக்கி விடுவீர்களேயானால் பாரதநாடு உங்களுக்கு நன்றி செலுத்தும். எல்லோரும் விரும்பும் இந்த அரும் பெருங் காரியம் நிறைவேறுமாறு எல்லாம் வல்ல பராசக்தி அருள்புரிவாளாக

தோன்றிற் புகழோடு தோன்றுக—அஃதின்றேல்
தோன்றுவதிற் றோன்றாமை நன்று.

கோமள விமோசனம்

(A. லூட்ஸ், சிங்கப்பூர்)

நானும் எனது நண்பன் வரதனும் இரவு 9மணிக்கு உணவருந்திவிட்டு வழக்கம்போல் கடலோரத்தில் சென்று உலாவி வரலாம் என்று சென்றோம். அன்று பூரண சந்திரன் வெகு பிரகாசமாக இருந்தது. நாங்கள் இருவரும் அங்கோரிடத்தில் அமர்ந்து, அன்று வாசித்த "ஆனந்தவிகடன்" "மாதர் மறுமலைம்" என்ற பத்திரிகைகளில் எழுதியிருந்த காங்கிரஸ், முஸ்லிம் லீக், விதவா விவாக நோக்கங்களைப்பற்றி சிந்தித்து உலகில் எத்தனையோ கோடி ஜீவராசிகளைப்படைத்து ஒவ்வொன்றின் உள்ளத்திலும் இருந்து ஆட்டுவிக்கும் பரம்பொருளை என்னென்று புகழ்வது? தாயுமானவர், அவனன்றி ஓர் அணுவும் அசையாது, என்றதும் பொய்யோ! உலகத்தில் எத்தனை மதம், எத்தனை ஜாதி, எத்தனை பாஷை, இவையெல்லாம் ஏற்படுத்தி யிருந்தாலும், அறிவு ஒன்று

தான் அல்லவா! என்று பேசியபடியே இருந்தோம். அந்நேரத்தில் ஒரு பெண் ஏதோ பெரும் துக்கத்தின்பேரில் பாடுவதுபோல் எங்கள் செவிக்கு எட்டியது. உடனே நாங்கள் இருவரும் எழுந்து இசைவரும் இடத்தை நாடிச்சென்று மறைந்துநின்று அப் பாட்டைக் கேட்கலானோம். அப்போது பெண் பாடியதாவது:—

"உடுத்தவோ ஒரு கந்தைக்கு மேலில்லை,
உண்ணவோ உணவிற்கு வழியில்லை,
படுக்கவோ பழம் பாய்க்குக் கெதியில்லை
பாரினில் நல்லவர்பாற் சென்றுபிச்சைதான்
எடுக்கவோ திடமில்லை, என்பாலுனக்கு
இரக்கமென்பதுமில்லை உயிரையும்
விடுக்கவோ மனமில்லை என் செய்குவேன்
பிறைச்சடை வித்தகவள்ளலே"

என்ற அருட்பாவை துக்கமாகவும் வெகு இனிமையாகவும் பாடி, "ஏ பிரபோ! ஆதிமூலமே என்ற யானையைக் காத்த வள்ளலே! ஏழையாகிய என்னை இவ்விதம் சோதிப்பது அழகா?" என்று மறுபடியும்,

எத்தாயர் எத்தந்தை யெச் சுற்றத்தா
ரெம்மாடு சும்மாடா மேவர் நல்லார்,
செத்தால் வந்துதவுவா ரொருவரில்லைச்
சிறு விறகால் தீ மூட்டிச் செல்லாநிற்பர்,
சித்தாய வேடத்தாய் நீடு பொன்னித்
திருவானைக்காவுடைய செல்வாவென்றன்
அத்தா வுன் பொற்பாதமடையப் பெற்று
லல்லகண்டங் கொண்டடியே னென்செய்கேனே

என்ற திருத்தாண்டகத்தைப் பாடி, "இறந்த பிறகு உதவுவார் ஒருவரில்லை என்று பாடியுள்ளார். நானோ இறப்பதற்குமுன் பிணமாய் இருப்பதை நீர் அறியவில்லையா? உன்னைத் தெய்வம் என்று உலகம் போற்றுகின்றதே; நான் ஏழுவருஷ காலமாக நீயே என் நாதன் என்றும், தாய்தந்தை என்றும் என் மனத்தை உனக்கே அர்ப்பணம் செய்துவந்ததை நீ அறியவில்லையா? 'அனு

வுக்குள் அணுவாய் பிரகாசிக்கும் அருட்பெருஞ்சோதி' என்பது பொய்யா? ஏழைகுரல் உனக்கு எட்டவில்லையா? அல்லது உன் காது செவிடா?'' என்று பைத்தியம்பிடித்தவள்போல் புலம்பி, "ஐயோ! நான் செய்தவினை இருக்க தெய்வத்தை நொந்து என்ன பிரயோஜனம்? நான் செய்த வினையை நானே அனுபவிக்கிறேன். ஏ ஆபத்பாந்தவா! அனாத ரக்ஷகா! என்னால் இனி சகிக்கமுடிய வில்லையே! ஐயோ! பணத்திற்காக ஆசைப்பட்டு என் வாழ்நாளைப் பாழாக்கிய என் தந்தையரே இக்கெதியில் என்னை நிற்க விட்டால் வேறு யார்தான் நிந்திக்கமாட்டார்கள்? ஏ கருணாநிதியே! உனக்கு இரக்கமில்லையா? என்னை ஏன் பெண்ணாகப் படைத்தாய்? நான் சிறு வயதில் இக்கெதிக்கு ஆளாகவேண்டுமென்பது உன் இஷ்டமா? அல்லது சாஸ்திரம் சாஸ்திரம் என்பது புளுகு மூட்டையா? அப்படிசாஸ்திரமென்றாலும்சாஸ்திரக்குப்பையெல்லாம் இருவாய்ப் புன்செயில் எருவாக்கிப்போட்டு மருட்சாதி சமயங்கள் மதங்கள் ஆச்சிரம வழக்கெல்லாம் குழிவெட்டி மண் மூடிப்போட்டு என்று நூறு வருஷத்திற்கு முன் அருட்பாவில் பாடியுள்ளதை உலகத்தார் அறியவில்லையா? நான் எதையும் தற்போது தீர்மானம் செய்ய முடியவில்லையே! நான் இதோ வருகிறேன், என் மாமன் மாமியிடம் பட்டதை நினைத்தாலும் என் திரேகம் நடுங்குகின்றதே'' என்று புலம்பியபடியே மூர்ச்சையடைந்தாள். நாங்கள் இருவரும் கண்ணீர் ததும்பியபடியே ஒரு வண்டி கொண்டுவந்து தூக்கிவைத்துக்கொண்டு எங்கள் வீட்டை அடைந்தோம். மூர்ச்சை தெளியும்வரை ஜாக்கிரதையாகப் பார்த்துக் கொள்ளும்படி என் மனைவியிடம் சொல்லிப் படுக்கையில் படுக்கப் போட்டோம். மணியோ 2½ ஆகிவிட்டது. நானும் வரதனும் அவன் ரூமுக்குச் சென்று உட்கார்ந்து பின் வருமாறு அப் பெண்ணைக் குறித்துப் பேசலானோம்:

பாவம் இப் பெண் யாரோ, எதனால் இப்படிப் புலம்பினளோ அவளுக்கு என்னகஷ்டம் நேரிட்டதோ, தெரியவில்லை. நாம் அவள் கிட்ட நெருங்கி இருந்தால் அவள் துக்கத்தினால் இனிமையாகப் பாடிய பாட்டையும் கேட்டிருக்க முடியுமா? ஆனால் அவள் முகத்தைப் பார்த்தாயா? எவ்வளவு பிரகாசமான முகம், சுடரொளி

போல் பிரகாசிக்கின்றது. தாழமுடியாத துயரத்தால்-சூரியவெப்பத்தால் செந்தாமரைப் புஷ்பம் வாடியது போலும் சந்திரனை மேகம் மறைத்தது போலும் இருக்கின்றது. வயது 16 அல்லது 17 இருக்கும் என்று பேசிக்கொண்டே இருந்தோம். பொழுதும்விடிந்தது நான் உடனே சென்று அப்பெண்ணைப் பார்த்தேன். அப்பொழுது அவள் மூர்ச்சை தெளிந்தெழுந்து என் மனைவியிடத்தில் தன் துக்கத்தைத் தெரிவித்துத் துக்கித்துக் கொண்டிருந்தாள். நான் உள்ளே சென்று அப்பெண்ணையும் என் மனைவியையும் பார்த்த வண்ணம் "அம்மா நீ ஒன்றுக்கும் கவலைப்படாதே. நாங்கள் உன்னைக் கைவிடமாட்டோம்" என்று சொல்லி என் மனைவியைப் பார்த்து ஏதேனும் ஆகாரங்கொடுத்தாயா என்றேன். அவளும் ஆம் என்றாள். பிறகு "அம்மா நீயார். நடு நிசியில் கடலோரத்தில் வந்து துக்கித்துக்கொண்டிருந்த காரணமென்ன? உன் பெயர் என்ன? தயவு செய்து எங்களிடத்தில் தெரிவிக்க முடியுமா?" என்று கேட்டேன். அவள் தாழ்ந்த குரலில், "ஐயா! நான் தங்களிடம் சொல்லாமல் வேறு யாரிடம் சொல்லப்போகிறேன். நான் மகா துர்ப்பாக்கியவதி; என் கதையைச் சொல்லித் தங்கள் மனதைப் புண்படுத்த விருப்பமில்லை; ஆயினும் தாங்கள் கேட்பதால் தெரிவிக்கிறேன். என் பெயர் கோமளம். என் தாய்தந்தையர்கள் பணத்திற்கு ஆசைப்பட்டு எனது ஒன்பதாவது வயதில் என்னை ஒரு நாற்பது வயது சென்ற கிழவர்க்கு, மணம் செய்து கொடுத்தார்கள். எங்கள் திருமணம் நடந்தேறிய மூன்றாவது மாதம் என் பர்த்தா காசநோய் கொண்டு இறந்துவிட்டார். அவர் இறந்த பிறகு, என் தாயாரும் என் கவலையாகவே இறந்துவிட்டாள். என் தந்தையோ மறுமணம் செய்துகொண்டு என்னைக் கவனிக்கவில்லையாதலால் நான் என் மாமியார் வீட்டோடு இருந்தேன். எங்கள் வீட்டுக்கு வந்தவர்கள் போனவர்களெல்லாம் என்னிடம் வந்து தோசி, தரித்திரம், பிணம், வந்ததும் வராததும் புருஷனை வாரி விழுங்கிவிட்டது என்று பலவாறு நிந்திக்கவாரம்பித்தார்கள். என்ன கொடுமை? நானோ ஒன்பது வயதுச் சிறுமி. இக்கொடூர வார்த்தைகள் என்னிதயத்தைப் பிளந்தன. என் பர்த்தா இறப்பதற்கு நானா காரணம்? இது இந்து தருமத்தின் கொடுமைபோலும்! நினைத்தாலும் நெஞ்சம் கலங்குகிறது. இந்த ஏழு ஆண்டுகளாக என்

மாமன், மாமி, செய்த கொடுமைகளையும் அவர்கள் நிந்தித்துப் பேசிய மொழிகளையும் இதுவரையில் பொறுத்திருந்தேன். ஆனால் இப்போது அடிக்கும் கொடுமையும் மிதமிஞ்சி விட்டது. அடியைப் பொறுக்க முடியவில்லை. ஆகையால்தான் நான் வீட்டில் உள்ள ஒருவருக்கும் தெரியாமல் நேற்றிரவு கடலோரம் வந்து புலம்பிக் கொண்டிருந்தேன். அவ்வளவு தான் எனக்குத் தெரியும். மற்றப் படி தங்களையும் தங்கள் மனைவியையும் கண்டேன்" என்று கண்ணீர் விட்டாள். உடனே நானும் எனது மனைவியும் துக்கத்தில் "ஆழ்ந்தவர்களாய், கோமளம்! நீ ஒன்றுக்கும் கவலைப்பட வேண்டாம். நடந்தேறியவைகளைக்குறித்து விசனப்படுவதில் பிரயோஜனமில்லை. உனக்குக் கடவுள் இனி நல்ல சுகத்தைக் கொடுப்பார். நீ இங்கேயே இருந்து உன் வீட்டைப் போல் கருதி நட. பிறகு யோசித்துக் கொள்வோம்" என்று அவளுக்குத் தேர்தல் சொல்லிக் கொண்டிருக்கையில் வரதனும் அவ்விடம் வந்தான். நாங்கள் இருவரும் எங்கள் காலை ஆகாரத்தை முடித்துக்கொண்டு நடந்தவைகளைப் பேசிக்கொண்டே ஆபீஸிற்குச் சென்றுவிட்டோம். இப்படியே நாளும் சென்று மாதமும் ஒன்றாய் விட்டது. நானும் கோமளத்தைப்பற்றி யோசித்த வண்ணமே இருந்தேன். என் நண்பன் அப்பெண்ணை நேசிப்பதும், அவளிடத்தில் எப்பொழுதும் தமாஷாகப் பேசிச் சிரிப்பதுமாக இருந்ததால் அவன் அவளைக் காதலிக்கிறான் என்று என் மனதிற்குப்பட்டது. அவனும் தாய் தந்தையர்கள் இல்லாதிருப்பதாலும் என்னை அவன் உள் அன்போடு நேசிப்பதாலும் அவனுக்கே கோமளத்தைத் திருமணம் செய்து விடலாம் என்று நினைத்தவனாய் அன்று இரவு சாப்பாட்டை முடித்துகொண்டு வரதன் ரூமில் உட்கார்ந்த வண்ணம் பின்வருமாறு பேசலானோம்:

நான்:—வரதா! கோமளத்தைப்பற்றி உன் அபிப்பிராயமென்ன?

வரதன்:—தங்கள் அபிப்பிராயம் எப்படியோ அப்படியே!

நான்:—உனக்கே கோமளத்தைத் திருமணம் செய்து விடலாம் என்பது என் அபிப்பிராயம்.

வரதன்:—எனக்கா! அவள் விதவை யாச்சே!

நான்:—மாதர் மறுமண சங்கத்தில் நீ ஒரு அங்கத்தினனாக இருந்தும் அவளை நீ விதவை என்று சொல்லலாமா? அவள் அன்று துக்கித்துப் பாடின பாக்களையும் நீ கேட்டாய் அல்லவா? கற்பே ஓர் உருவாய் அமைந்த அப்பெண்ணை என்னவென்று சொல்வது:

"இளிவரின் வாழாத மானமுடையா
ரொளி தொழுதேத்து முலகு"
"அணி யன்றோ நாணுடைமை"

என்ற வாக்கைப் பின்பற்றிய மங்கையர்க்கரசியை நீ விதவை என்பது தகுமா?

வரதன்:—அண்ணா! நான் விளையாட்டாகச் சொன்னேன். தங்கள் விருப்பம் என் பாக்கியம்.

நான்:—மனப்பூர்வமாக அவளை விவாகம் செய்து கொள்ள இஷ்டம்தானே?

வரதன்:—ஆம்!

சந்தோஷத்தோடு அன்றைய இரவைக் கழித்து மறுநாள் காலையில் ஸ்நானம் செய்து முடித்துக்கொண்டு காலை ஆகாரம் அருந்த உட்கார்ந்தோம். அச்சமயம் நான் கோமளத்தை அழைத்து வரதனைச் சுட்டிக்காட்டி அவரை மணக்க சம்மதம் தானே என்றேன். அவள் சிறிது நாணத்துடன் தங்கள் இஷ்டம் என்று சொல்லிய வண்ணம் உள்ளே சென்று விட்டாள். நான் மனக்களிப்போடு மறுதினமே திருமணத்திற்கு ஆக வேண்டிய ஏற்பாடுகளெல்லாம் செய்து மாதர் மறுமண சங்கத்துக்கு லிகிதம் அனுப்பி, அவர்களின் சட்டப்படி வரதனுக்கும் கோமளத்திற்கும் திங்கள்கிழமை காலையில் ஆண்டவன் அருளால், ராஜகோபால் அவர் கள் தலைமையில் திருமணம் நடந்தேறியது. அங்கிருந்த சிறுவர் சிறுமிகளால் வெகு இனிமையாக,

பெண்மை வாழ்கென்று கூத்திடுவோமடா
பெண்மை வெல்கென்று கூத்திடுவோமடா

தண்மை இன்பநற் புண்ணியஞ் சேர்ந்தன
தாயின் பேரும் சதியென்ற நாமமும்

என்று பாடப்பட்டது. பிறகு தலைவர் அவர்கள் பின் வருமாறு பேசலானார்:—

இச்சபையில் கூடியிருக்கும் எனது சகோதர, சகோதரிகளே! தேசாபிமானமும் செந்தமிழ் இனிமையும் வீரமும், தீரமும் ஓர் உருவாய் அமைந்த இளஞ் சிங்கங்களே, பாரதத்தாயின் புதல்வர்களே! எதிர்கால இந்தியா உங்கள் கையில் இருப்பதை நீங்கள் அறிந்தும், செந்தமிழின் உண்மையை எடுத்துரைத்த ஔவைப் பிராட்டி பிறந்த நாட்டில் பெண்களை அடிமை என்னும் பேய்க்கு அடிமையாக்கி வைப்பது அழகா என்பதை சற்று யோசனை செய்து பார்த்தால் உண்மை விளங்கு மென்பது திண்ணம். தேசகவி சுப்பிரமணிய பாரதியார் பாடல்களையும், தற்கால நமது பாரத வீரர் சுபாஷ் போஸின் வீர மொழிகளையும் நீங்கள் உணர்ந்தும் இன்னும் தூங்கிக்கொண்டு இருந்தால் பின் எப்போது கண் விழிப்பது? வீரத்தாயின் புதல்வர்களே! நம்போல் ஆறறிவு படைத்து 10 மாதம் கர்ப்பத்தில் இருந்து பிறந்த அருந்தவப் பெண்களாகிய விதவைகளின் இரத்தக் கண்ணீர் பெருகப் பெருக நம்மைப் பிறர், இரத்தக் கண்ணீர் பெருக்கி அழும்படி செய்வதை நீங்கள் அறியவில்லையா? பாழும் பணப்பேய் பிடித்த தாய் தந்தையர் "அருமையான கிளியை வளர்த்துப் பூனைக்கு இரை கொடுப்பதுபோல்" தங்கள் புத்திரிகளைப் பாழும் கிணற்றில் தள்ளுவதைப் பார்த்துக் கொண்டிராமல் பாலிய விவாகத்தை அறவே ஒழிக்க முன் வருவதுடன், இது வரையில் மூலையில் இருந்து கண்ணீர் வடிக்கும் பெண் மணிகளை மறுமணம் செய்து நகமும் சதையும் போலும், ஓருயிரும் ஈருடலும் போலும் காதல் வாழ்வு நடத்தி சம உரிமை கொடுக்க முன் வருவீர்களானால் நம் நாடு துன்பம் நீங்கி இன்ப நாடாகுமென்பதில் சந்தேகமுண்டோ? இனியாகிலும் பெண்களை ஆடுமாடுபோல் நடத்தும் கொடுமையை

நீக்கி நம் நாட்டுவிதவைப் பெண்மணிகளின் உள்ளத்தைக் குளிரச் செய்வீர்கள் என்று எதிர்பார்க்கின்றோம்.

"வாழ்க தமிழ்மொழி! வாழ்க தமிழ்மொழி!!
வாழிய வாழியவே.
எங்கள் தமிழ்மொழி! எங்கள் தமிழ்மொழி!!
என்றென்றும் வாழியவே."

புதுமைப் பெண்

(ஸ்ரீமதி அம்மு சுவாமிநாதன்)

பெண்மக்கள் பிரச்னை இக்காலம் போன்று, உலக சரித்திரத்தின் வேறெக்காலத்திலும் அவ்வளவு முக்கியமாக விளங்கவில்லை. இந்திய புதுமைப்பெண் இன்று எப்படி யிருக்கின்றாள்—நாளை எப்படி யிருப்பாள் என்ற விஷயத்தில் யாருடைய கவனமும் செல்வது இயற்கை.

பண்டைக்காலத்தில், இந்தியாவில், பெண், குடும்பத்தில் ராணியாக விளங்கினாள். எல்லோராலும் நேசிக்கப்பட்டாள்; கௌரவிக்கப்பட்டாள். சாந்தமும், வலிமையும் பெண் தன்மையின் உயரிய லட்சியங்களாகப் பண்டைய இதிகாசங்களில் விளக்கப்பட்டிருக்கின்றன.

அந்த அழகிய லட்சியங்களை மேற்கொள்வதுடன், புதுமைப்பெண் காலத்திற்கிசைந்து முன்னேக்கிச் செல்வாளென நம்புகின்றேன். தேசசேவையில் தனக்குரிய பங்கு முழுமையும் ஏற்று நடத்தவேண்டுமென்று புதுமைப்பெண் விரும்பினால், முதன்முதல் தன் எதிரே நிற்கும் தடைக் கற்களை நீக்கும் வேலையிலே முதலாவதாக இறங்க நேரிடும். பொருளாதார விஷயத்தில் அவள் பிறரை எதிர்பார்த்து வாழவேண்டி யிருப்பது பிரதிகூலங்களிலெல்லாம் மிகப் பெரிது என எனக்குத் தோன்றுகிறது. பொருளாதார சுதந்திரம் கிடைத்துவிட்டால் அதன்மூலம் ஒவ்வொரு பெண்ணுக்கும்—அவள் பொது வாழ்க்

கையிலீடுபடுவதற்கு அத்யாவசியமான—சுய நம்பிக்கையும் சுய மரியாதையும் கிடைத்துவிடும்.

கல்வியின் முக்கியத்துவத்தை இக்காலப்பெண் உணர்ந்து விட்டாள். இந்தியாவில் அது மிகப் பெரிய பிரச்னைகளில் ஒன்று. ஜனங்கள் படிப்பில்லாதவர்களாக அறியாமையில் ஆழ்ந்திருக்கும் வரை எந்த தேசமும் முன்னேற முடியாது. குழந்தைகளுடைய—எதிர்காலப் பிரஜைகளுடைய-கல்வி சம்பந்தமான பிரச்னையை நன்கு தீர்க்கவல்லவர் பெண்களைவிட வேறு யார்? எதிர்காலத்தில் தேகப்பயிற்சி முறைகளைக் கற்பிக்கும் கல்வி மிக முக்கியமானதாக இருக்குமென்பதைப் பெண்கள் அதிகமாக உணர்ந்து வருகிறார்கள். பூரண ஆரோக்கியமின்றி எந்த நாடும் அபிவிருத்தியடைய முடியாது.

பெண்களுடைய முடிவான உத்தேசம், வாழ்க்கையின் லட்சியம் மணம் ஒன்றே ஒன்றுதான் என்று பள்ளிக்கூடத்திலாயினும் சரி, வீட்டிலாயினும் சரி எந்தப்பெண்ணும் நம்பும்படி செய்யலாகாதென்பதை இன்றையப் பெண்ணுலகம் நன்கு உணர்ந்துவிட்டது. எந்த வாழ்க்கை வேண்டுமென்பதைத் தெரிந்தெடுக்கும் உரிமையை அவர்களுக்கே விட்டுவிடவேண்டும்; தாய்மார்களாகவும், மனைவியராகவும் இருப்பதைப்போன்று அவ்வளவு உயர்வாக வேறு எத்துறையிலும் பெண்கள் பிரகாசிக்க முடியாதென்று இதனால் ஏற்பட்டுவிடாது. ஆனால், வீட்டுக்கு வெளியிலும் பெண்கள் சிரத்தைகொள்ளும்படி பயிற்சி யளிக்கப்பட வேண்டும்.

பெண்கள் பொதுவாழ்க்கையி லீடுபட்டால், குடும்ப வாழ்க்கையில் அசிரத்தை கொண்டுவிடுவார்களென்று பயம் தோன்றியிருப்பதாகத் தெரிகிறது. அந்தமாதிரி பயப்படுவதற்குக் காரணமெதுவுமில்லை யென்பதைப் பெண்ணுலகம் நிரூபித்துவிட்டது.

புதுமைப் பெண்—சட்டசபை யங்கத்தினராகவும், உபாத்தியாயராகவும், டாக்டராகவும்—ஏற்றுக்கொண்ட எவ்வேலையையும் திறமையாகவும், தகுதியுடனும் நிர்வகித்திருக்கின்றாள். சட்டசபை அங்கம் பெற்று, தனக்கேற்பட்டுள்ள பலவிதக் கஷ்டங்களை நீக்கி

யிருக்கின்ருள். பெண்கள் கொண்டு வரும் சில மசோதாக்களைப் பற்றி, விசேஷமாகப் பலதார மணத்தடை மசோதாவைப்பற்றிக் கண்டனம் வெளியிட்டு வருகின்றனர். ஆனால், காகிதத்தில், பேனு முனையினுல் வேடிக்கையாகக் கண்டனக் குறிப்புகள் எழுதுவது ஒரு வேலை எளிதாக இருக்கலாம்; ஆனால் பெண்கள் பிரச்னையை உணர்ந்து அவர்களுக்கு ஏற்பட்டுள்ள பலவிதக் கஷ்டங்களையும் தெரிந்து கொண்டிருப்பவர்களுக்கு, ஆடவர்க்கும் பெண்டிர்க்கும் சட்டங்கள் ஏற்றத் தாழ்வாக அமைந்திருப்பதை மாற்றியமைப்பது எவ்வளவு முக்கியமானது என்பது விளங்கும்.

ஆண்களோடு சமமாக நின்று பொது வாழ்வில் உழைக்க புதுமைப் பெண் எவ்விதத்தும் தகுதி வாய்ந்தவள் என்பதை நிரூபித்து விட்டாள். ஆடவரோடு எதிர்த்துப் போட்டியிட வேண்டுமென்ற கருத்தில்லை. ஆனால், சமூக முன்னேற்றத்துக்காகவும், தேச முன்னேற்றத்துக்காகவும் தானும் பங்கெடுத்து உழைக்க வேண்டுமென்ற விருப்பந்தான். உலக தேசங்களில் இந்தியாவும் தனது நியாயமான அந்தஸ்தைப் பெறவேண்டுமானுல், பெண், ஆடவனுடைய கூட்டாளியாகக் கருதப்பட்டு, பொறுப்பில் அவளுக்குரிய பங்கு முழுவதையும் கொடுக்க வேண்டும்.

அப்படியானுல் புதுமை மனிதனின் நிலை என்ன?—பெண்கள் அந்தஸ்து பற்றிய தனது பழைய நம்பிக்கைகளை யெல்லாம் விட்டு விட்டு, அவளைத் தனது உண்மையான தோழியாகக் கருதி அவளோடு சேர்ந்து உழைப்பதைப் பெருமையாகக் கொண்டு அவளுடைய உதவியை எப்பொழுதும் பெற்று இருவரிடையும் பரஸ்பர நல்லெண்ணத்தை உண்டு பண்ணமாட்டானு? (ரேடியோ பிரசங்கம்)

ஓம் மண்டலி

ஹைதராபாத் (ஸிந்து) தில், மனைவியர் வேலை நிறுத்தம் ஆரம்பித்து விட்டதாக ஓர் செய்தி பத்திரிகைகளில் வெளியாகி உலகத்தையே ஒரு கலக்குக் கலக்கி விட்டது. அன்று முதல் ஹைதராபாத் 'ஓம் மண்டலி' யென்பது என்ன? அங்கு பெண்கள் கூடி என்ன செய்கிறார்கள்? மனைவியர் உண்மையிலேயே தங்கள் புருஷர்களை 'ஏகாங்கிக'ளாகத் தவிக்க விட்டு விட்டுக் 'கன்னிமாடம்' புகுந்து விட்டார்களா? இந்தக் கேள்விகள் பொதுஜன கவனத்தை ஈர்க்க ஆரம்பித்திருக்கின்றன. இத்தியாதி விஷயங்களை விளக்கி ஒரு நிருபர் வரைந்துள்ள கடிதம் கீழே சுருக்கித் தரப்படுகிறது:

ஓம் மண்டலி புதுமையான பெண்கள் இயக்கத்தைச் சேர்ந்த ஒரு ஸ்தாபனமாம். கீதையின் உபதேசத்தைப் பின்பற்றி இது ஸ்தாபனமாகி யிருப்பதாகச் சொல்கிறார்கள். "நீ தன்னை யறிந்து கொள்" என்பதுதான் அந்த உபதேசம். இந்த இயக்கத்திற்கு டாடா லெக்ராஜ் தலைவர். ஸிந்தில் இவரை தேவதூதராகக் கொள்கின்றார்கள். ஸ்ரீ கிருஷ்ணனின் புதிய அவதாரமாம். எனவே, முந்தின அவதார புருஷர்களை எப்படி சமூகம் துன்புறுத்தியதோ அதேபோல் இவரையும் சமூகம் துன்பப்படுத்துவதாகச் சொல்கின்றார்கள். பெண்கள் இல் வாழ்க்கையைத் துறந்து பிரம்மசரியத்தைக் கைக்கொள்ள வேண்டுமென உபதேசிக்கப் படுவதால் குடும்ப வாழ்க்கைக்கு ஆபத்தேற்பட்டு மனித சமூகமே பூண்டற்றுப் போய்விடுமோ என்று பயப்படுகிறார்கள். இது காரணமாக பலர் ஓம் மண்டலி முன்பு மறியல் செய்ய ஆரம்பித்தனர். எனவே ஓம் மண்டலி ஸ்தாபகர், முக்கியஸ்தர்கள் நால்வர், மறியல் செய்தோர் ஆகியவர்கள் மீது இ. பி. கோ. 107-வது பிரிவின்படி கிரிமினல் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

ஸ்தல அதிகாரிகளுக்கு இந்தமண்டலியின் விஷயம் ஒருகஷ்டமான பிரச்னையாகி விட்டது. டாடா லெக்ராஜ்கூப் சந்த்கிரிபாலினி, ஒரு மாஜி வர்த்தகர். அவரது குருவின் தூண்டுதலின் மேல், தமது க்ஷேமநிதி நாலு லட்ச ரூபாயையும் ஓம் மண்டலிக்கு தானம் செய்து பெண்களிடையே 'உண்மை ஞான'த்தைப் பரப்பத் திட்டம் போட்டார்.

இந்த ஸ்தாபனத்தின் தலைவர் ஓம் ராதி என்றழைக்கப் படுகிருர். அவருடன் பெண்கள் கமிட்டியொன்று அமைக்கப்பட்டு நிர்வகிக்கப்படுகிறது. தினமும் சத் சங்கக் கூட்டங்களும் பஜனைகளும் நடைபெறுகின்றன. கடவுள் கோவில்களில் ஒளிந்து கொண்டிருக்கவில்லை—மதத்தின் பேரால் வயிறு வளர்ப்போருடைய ஏகபோக பாத்தியமுமல்ல—இது தான் இந்த இயக்கத்தின் முக்கிய நம்பிக்கை.

பாய்பந்து (வர்த்தக) சமூகத்தைச் சேர்ந்த பெண்கள், சந்தேகிக்கத் தக்க நடவடிக்கையுள்ள மத போதகர்களிடம் உபதேசம்பெறச் செல்வதுண்டாம். அம் மாதிரி இடங்களுக்குச் செல்லாமல் உண்மையான ஞானம் பெறச் செய்யும் நோக்கத்துடன் இந்த ஸ்தாபனம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அனாதைப் பெண்கள் கைத்தொழில் கற்றுப் பிழைக்கும்படி செய்ய, தையல், ஓவியம், பின்னல் முதலிய தொழில்கள் கற்பிக்கப்படுகின்றன. மணவாழ்க்கையில் புகு முன்பு, உண்மை ஞானத்தை ஒவ்வொரு பெண்ணும் பெற்றுக்கொள்ள வேண்டியது அவசியம் என்பது வற்புறுத்தப் படுகின்றது. இந்த உபதேசத்தின் பலன் அதிகரிப்பதற்காக, பெண்கள் தாங்கள் பெற்ற ஞானத்தைத் தங்கள் கணவர்களுக்கும் அளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிருர்கள். சமூகம் நல்ல முறையில் திருத்தியமைக்கப் படுதற்கு இது நல்ல வழி அல்லவா? இதனுல் புருஷர்களிடையே மிகுந்த பரபரப்பு ஏற்பட்டது. தங்களுக்கு மறுமணஞ்செய்ய அனுமதியளிக்குமாறு மூவர், பஞ்சாயத்திடம் மனுச்செய்தனர்.

மேற்கண்ட மூவருடைய மனுக்கள் சம்பந்தமாக விசாரணை செய்ததில் அந்த மூன்று பெண்களும் பதினைந்து வருடங்களுக்கு முன் கல்யாணம் செய்யப்பட்டு பல குழந்தைகளைப்பெற்று மிகவும் நோயுற்றிருப்பதாயும் இன்னும் குடும்ப வாழ்க்கையில் நீடித்திருப்பது அவர்களுடைய ஆயுளுக்கும் உடல் நலத்திற்கும் ஏற்றதல்லவென்றும் தெரியவருகிறது. மேலும், அந்தப் பெண்கள் ஓம் மண்டலியில் சேருமுன்பே அவர் குடும்பங்களில் சச்சரவு இருந்து வந்ததாகவும் தெரிகிறது. தங்கள் தினசரி வாழ்க்கையில் இஷ்டம் போல் நடக்க ஓம் மண்டலி சுதந்திரமளிக்கின்றது. ஸ்ரீ கிருஷ்ண

னுக்குத்தான் பதினாயிரம் மனைவியர் இருந்ததாகச் சொல்கிறார்களே? அவரது அவதாரமான ஓம் மண்டலித் தலைவர் எப்படி பிரமசரியத்தை அனுஷ்டிப்பது?—என்று கேட்கிறார்கள்.

இன்னொன்று. மனைவியர், சுவர்க்கத்தில் ஒரு 'ஸீட் ரிசர்வ்' செய்து கொள்ளும் முயற்சியில், தங்கள் புருஷர்களையும் குழந்தைகளையும் வீட்டையும் விட்டுப் பிரிந்து விடுகின்றனர் என்று குறை கூறப்படுகிறது. குடும்ப வாழ்க்கையில் பெண்களுக்கு வெறுப்பு ஏற்படுவானேன்? பாய்பந்த் சமூகம் மொத்தம் 60000 ஜனத் தொகை கொண்டது. அத்தனைபேரும் வியாபாரிகள். இதில் 12000 பேர்—ஆடவர்—வெளிநாடுகளில் தொழில் புரிவோர். மூன்று முதல் ஐந்து வருஷகாலம் வரைச் சொந்தநாட்டுக்கு வராமல் அங்கேயே தங்கிவிடுகின்றனர். சொந்த ஊர்வந்தால் ஆறு மாதத்துக்கு மேல் தங்குவதில்லை. இது பெண்களுக்குக் குடும்ப வாழ்க்கையில் சந்தோஷம் ஏற்படாதிருப்பதற்கு ஒரு முக்கிய காரண மல்லவா?

சத்சங்கக் கூட்டங்களில் ஓம் மண்டலிப் பெண்கள் பரவசமடைந்து மெய் மறந்திருப்பது ஏதோ ஒரு மாய மந்திர சக்தியின் வேலையென்றும் எனவே அதன் தலைவரைப் பொதுஜன விரோதியாகக் கொள்ள வேண்டுமென்றும் சொல்கிறார்கள். அவ்வாறு கவர்ன்மெண்டுக்குப் பொது ஜனங்கள் கொடுத்த விக்ஞாபனத்தில் குறிப்பிட்டிருக்கிறார்கள்.

ஜூன் 21வ ஆயிரம் பேர் கூடி தலைமை ஸ்தாபனத்தைச் சூழ்ந்து தாக்கினார்கள். கட்டிடமும் சொத்துக்களும் சேதப்பட்டன. எனவே, தலைமை ஸ்தாபனம் அங்கிருந்து ஓம் நிவாஸ் எனும் கிளை ஸ்தாபனத்துக்கு மாற்றப்பட்டது. எதிர்ப்போர் அங்கும் சென்று மறியல் நடத்தினர். மறியல் பலப்படவே, பலர் வாயிலின் முன்பு வரிசையாகச் சுவர்போல நின்றனர்; பின்னர் தரையின் மீது வரிசையாகப்படுத்து மறியல் புரிந்தனர். நாளுக்கு நாள் கூட்டம் அதிகரிக்கவே, சமாதான பங்கம் ஏற்படுமென அஞ்சிப் போலீஸார் தலையிட்டனர். மறியல் செய்தோரில் ஐவர், மண்டலித் தலைவர்களில் ஐவர் ஆகியோர் மீது கிரிமினல் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. ஆடவரும் பெண்டிரும் சேர்ந்து நடத்

தும் 'கூட்டு சத் சங்கங்க'ளை நடத்தக் கூடாதென்றும் தடையுத் தரவு போடப்பட்டது. ஆனால் மண்டலியார், எந்த விதமான சத் சங்கத்தையும் நடத்தாமல் நிறுத்திவிட்டனர்.

ஓம் மண்டலியைக் கலைத்து விடுங்கள் என்று எதிர்ப்போர் சொல்கிறார்கள்; வேண்டாம், திருத்தி அமையுங்கள் என்கிறார்கள் வேறு சிலர். ஆனால் இதில் சமரஸம் ஏற்படுமென்று சொல்ல முடியவில்லை.

ஓம் நிவாஸ் அங்கத்தினர்கள் பத்து நாட்களாகத் தொடர்ந்து வெய்யிலில் வரிசையாக நின்று மறியலை எதிர்த்து மறியல் நடத்தினர். சிறிதும் மனங்கலங்காமல் அவர்கள் ஒழுங்காக நின்றது குறிப்பிடத்தக்கது. அவர்கள் பெற்றுள்ள பயிற்சியை யாரும் பாராட்டுவர்.

ஓம் நிவாஸ், 1937ல் 17 மாணவர்களுடன் ஸ்தாபிக்கப்பட்டது. மாணவர்களுக்கு உணவு, உடை, கல்வி யெல்லாம் இலவசமாக அளிக்கப்படுகின்றன. அதை ஒரு நவீன குருகுல மென்று சொல்லலாம். பாடபுத்தகமோ, பரீட்சையோ இல்லை. பாட்டுகளிலும், பிரசங்கங்களிலு மிருந்தே மாணவர்கள் கற்கின்றார்கள். சிந்து பாஷையிலும்,ஹிந்தியிலும்ஆங்கிலத்திலும்எழுதவாசிக்கவும், வீட்டுக் கணக்கும் கற்பிக்கப்படுகின்றன. பாடப்படும் பாட்டுக்களை மகிழ்ச்சியுடன் கற்று உண்மைப்பொருளை உணர்கிறார்கள். அவர்கள் 'இள ஞானிகள்.'

அவர்களுடைய தினசரி வாழ்க்கை முறை இதுதான். காலையில் 4 மணிக்கு படுக்கை விட்டு எழுதல்; காலைக் கடன்களை முடித்து விட்டு, ஒரு கப் பால் குடித்ததும் ஒரு மைல் நடக்கிறார்கள். திரும்பும் போது சில சமயம் மோட்டார் பஸ்ஸில் வருவதுமுண்டு. 6 முதல் 7-30 வரை சத்சங்கக் கூட்டம். பின் காலை உண்டி 11 மணி வரை வகுப்புப் பாடங்கள். இடை வேளையில் பழ உணவு; மீண்டும் 12-30 வரை வகுப்புகள். 1 மணிக்கு உணவு; மாலை 4 மணிவரை ஓய்வு. 6 மணிவரை விளையாட்டுகளும் படிப்பும். மாலைச் சிற்றுண்டி, மீண்டும் 8-30வரை சத்சங்கம். இரவு 9 மணிக்கு சாப்பாடு. பின் படுக்கை. முன்கால குருகுல முறைப்படி இந்தக்கால அட்டவணை தயாரிக்கப்பட்டிருக்கிறது.

மாணவர்கள் தங்கள் துணிமணிகளையும் பாத்திரங்களையும் தாங்களே சுத்தஞ்செய்து கொள்கின்றனர். ஓம் நிவாஸத்தில் சமைக்காத எதையும் அவர்கள் சாப்பிடுவதில்லை. ஓம் நிவாஸில் ஏழு 'மேட்ரன்'கள் இருக்கின்றனர். டாடா லெக் ராஜூம் தமது மனைவி, புத்திரன், மருமகளுடன் அங்கேயே இருக்கின்றார். அனைவரும் ஓம் மண்டலியில் மெம்பர்கள். மாதம் சராசரி 1500 ரூபாய் செலவாகிறது. யாரிடமிருந்தும் நன்கொடை அல்லது தானம் வாங்குவதில்லை. தலைவர்விட்ட தர்ம சொத்திலிருந்தே எல்லாச்செலவும் நடக்கிறது. ஓம் மண்டலிக்கு கராச்சியிலும் ஒரு கிளை உண்டு. வேறிடங்களிலும் ஸ்தாபிக்க முயற்சிக்கப்படுகிறது. சமீபத்தில், தலைமைக்காரியாலயம் கராச்சிக்கு மாற்றப்பட்டிருக்கிறது.

பெண்களும் கல்விப் பிரசாரமும்

நாட்டிலுள்ள கல்வியின்மையைப் போக்க படித்த பெண்கள் என்னென்ன முறைகளில் உழைக்கலாமென்பதை விளக்கி ஆமி பி. ஜே. ரஸ்டோம்ஜி, அகில இந்திய மாதர் சங்கப் பத்திரிகையில் வரைந்துள்ள கட்டுரையின் சாரம் வருமாறு:—

வாழ்க்கையில் அந்தத் துறையை சீர்திருத்த வேண்டும், இந்தத் துறையை அபிவிருத்தி செய்யவேண்டும் என்றெல்லாம் நாம் பேசுகிறோம். ஆனால், நாட்டிலுள்ள படிப்பின்மையைப் போக்காமல் அரசியலைப்பற்றிப் பேசமுடியாது. படிப்பு வாசனை யில்லாதவனுக்கு அரசியலைப்பற்றி என்ன அறியமுடியும்? ஆகவே, அரசியலுக்குள் கொண்டுவரு முன்னதாக, அவனுக்கு அட்சரங்களையேனும் கற்பிக்க வேண்டும். இல்லாவிட்டால் எல்லாம் வெறுங் கதையாகவும், கற்பனையாகவும், வதந்திகளாகவும், வம்புப் பேச்சாகவும், மூடநம்பிக்கையாகவுமே இருக்கும். இந்தியாவில் இவை மனிதனுடைய சக்தியை எவ்வளவு தூரம் மழுங்க வைக்கின்றன என்பதை நாமறிவோம். எனவே, ஒவ்வொருவரும் அவரவர் பிரதேசத்தில், இந்த அறியாமைப் பேயை எதிர்த்து போராடுவோம்.

தன் பக்கத்திலுள்ள ஒவ்வொரு சிறுமியும் பள்ளிக்கூடத்திற்குப் போகும்படி செய்யவேண்டியது ஒவ்வொரு பெண்மணியுடையவும் கடமையாகும். நகரங்களிலே, நடுத்தர உயர்தர வகுப்புக்களி டையே பிள்ளைகளைப் பள்ளிக்கூடங்களுக்கு அனுப்ப வேண்டுமெ ன்ற உணர்ச்சி ஏற்பட்டுவிட்டது. ஆனால், சகல வகுப்பு மக்களி டையேயும் இவ்வுணர்ச்சி பரவும்படி நாம் பார்த்துக்கொள்ள வேண்டும். ஏனெனில் உடம்பில் எந்தச் சிறு பாகத்திலும் நோயி ருந்தால் அந்த உடம்பு ஆரோக்கியமாக இருக்க முடியாதல்லவா? வாரம் அரைமணி நேரம் ஒவ்வொரு பெண்மணியும் இந்தப் பிரசா ரத்துக்காகச் செலவிட்டு, பெற்றோர்களைத் தங்கள் குழந்தைகளைப் பள்ளிக்கனுப்பும்படி தூண்ட முடியுமானால், எவ்வளவோ நன்மை ஏற்படும்.

தாழ்த்தப்பட்ட ஹரிஜன வகுப்புகளிடையேதான் இந்த அறியாமைப் பேய் தாண்டமாடுவதாக நாம் எண்ணிக் கொண்டி ருக்கிறோம். உண்மை அப்படியல்ல. பிராமணப் பெண்களிலே கணக்கற்றவர் எழுத்துவாசனை யில்லாதிருக்கின்றனர். பம்பாய் மாகாணத்திலுள்ள, முற்போக்குற்ற சில சமூகங்களின் நிலைமை யைக் கவனிப்போம். கவுட் சரஸ்வத்பிராமண வகுப்பிலுள்ள 19 சதமானம் பெண்களேபடித்தவராயிருக்கின்றனர். தேசாஷ்தா பிரா மணரில் ஆடவரில் 80 சதமானம் பேர் படித்திருக்கப் பெண்களில் 20 சதமானம் பேர் மட்டுமே கல்வி யறிவுள்ளவராயிருக்கின்ற னர். சித்பவான் பிராமணரில் 77 சதமானம் பேர் ஆண்களிலும், 33 சதமானம் பேர் பெண்களிலும் கல்வி கற்றிருக்கின்றனர். காயஸ்த பிரபு வகுப்பில் மட்டும் 51 சதமானம் பெண்கள் படித் திருக்கின்றனர்; ஆண்களில் 75 சதமானம் பேர் படித்திருக்கின் றனர். இவை இந்துக்களில் முன்னேற்றமடைந்த வகுப்புகளா கும்; இவர்களில் பெரும்பாலாருக்கு நகரங்களில் சம்பந்த மிருக் கிறது. அவர்கள் வெறும் கிராமவாசிகள் மட்டுமல்ல.

உயர்வகுப்புக்களில், நூற்றுக் கணக்கில் சம்பளம் வாங்கும் உபாத்தியாயர்களைப் பார்த்திருக்கிறேன்; ஆனால் அவர்கள் மனை விமார்கள் எழுத்துவாசனை யற்றவர்களாயிருக்கின்றனர்; எனி னும் அந்த ஆசிரியர்கள் பொதுப்பணத்திலிருந்து சம்பளம் பெறுகி

ருர்கள். நாமே அறியாமையை அனுமதிக்கின்ருேம்; அவ்வாறு அனுமதிக்கக் கூடாது. கிராமங்களின் நிலைமை வேறு. பல கிராமங்களில் பள்ளிக் கூடங்களே கிடையாது. கிராம வாசிகளின் நிலைமையும் பல காரணங்களால் அவர்கள் குழந்தைகளைப் பள்ளிக்கனுப்பச் சாதகமாயிருப்பதில்லை. ஆனல், நகரங்களின் நிலைமையே வேறு. அங்கு எழுத்தறி வில்லாமையிருக்க நியாயமில்லை. தொடர்ச்சியாக ஆறு மாதகாலத்திற்குள், மிகச் சோம்பேறியான மனிதனுக்குக் கூட எழுதவாசிக்கக் கற்றுக்கொடுத்து விடலாம்.

பம்பாயில், மக்களிடையே எழுத்துவாசனையைப் பரப்புவதை மட்டும் நோக்கமாகக் கொண்ட ஸ்தாபனங்கள் பல இருக்கின்றன. இந்த ஸ்தாபனங்களுக்குச் சென்று படிக்கும்படி ஆண்களையும் பெண்களையும் வற்புறுத்தலாம். நகரங்களில் முனிஸிபாலிட்டியார் என்னென்னவோ சட்டங்களைப் போடுகிருர்கள். எழுதப் படிக்கத் தெரியாதவர்களை யெல்லாம் இந்த ஸ்தாபனங்களுக்குச் சென்று தினம் ஒருமணி நேரமாவது படிக்கும்படி கட்டாயப் படுத்தலாம்.

கைத்தொழில்களில் ஈடுபட்டுள்ள ஊழியர்கள் தொகை இந்தியாவில் ஒன்றரைக் கோடியாகும். இவர்களுக்குத் தக்கபடி கல்வியளிக்க வசதிகள் ஏற்படும்படி செய்தால், அடுத்த ஜன கணிதத்துக்கு முன் இந்தத் தொழிலாளிகள் அத்தனைபேரும் படிப்பு வாசனை பெற்றவர்களாக மாறிவிடமாட்டார்களா? ஹோட்டல்கள், கிளப்புகளில் நாலு லட்சம் தொழிலாளிகள் இருக்கின்றனர். அவர்கள் தினமும் நீண்ட நேரம் வேலை செய்கின்றனர். ஆனல் படித்தவர்களுடன் அவர்களுக்கு நெருங்கின சம்பந்தம் ஏற்படுகிறது. அவர்களுக்குக் கல்வி புகட்டும் விஷயத்தில் நாம் சிரத்தையெடுக்க வேண்டாமா? போலீஸில் சுமார் ஐந்து லட்சம் பேர் இருக்கின்ருர்கள். இவர்களில் பெருந்தொகையினருக்குக் கல்வியறிவில்லை யென்ற செய்தியைப் பத்திரிகையில் படித்துத் திடுக்கிட்டேன். பெண்களில் பலர் சட்டசபைகளில் புகுவதால், அவர்கள் இம்மாதிரி நிலைமையை மாற்ற சட்டமூலமோ மற்ருே ஏதாவது வழி செய்ய முடியும்.

நகரங்களில் அறியாமையைப் போக்குவது அவ்வளவு கஷ்டமானதல்ல. தைரியமாக முனைந்து நின்றால் இந்தப் பிரச்னையை வெகு சுலபமாகத் தீர்த்துவிடலாம். நகரங்களில் எத்தனையோ பெண்கள் வேடிக்கையிலும் விளையாட்டிலும் உடையிலும் மாதந்தோறும் தாராளமாகச் செலவிட்டு வரவில்லையா? இதைக் கொண்டு குறைந்தது பத்துப் பெண்களையாவது படிப்பிக்கலாம். நான் இவற்றைக் கண்டிப்பதாகக் கருதவேண்டாம். ஆனால் நமது சகோதரிகள் பலர் இவற்றைப் பற்றிக் கேட்கவும் சக்தியற்றவர்களாயிருக்கும்போது நாம் நமது சுயநலத்தை மட்டும் கவனித்துக் கொண்டிருப்பதைப்பற்றியே வருந்துகிறேன். நம்மில் பாக்கியசாலிகளாயிருப்பவர்கள், இந்தப் பெண்கள் விஷயத்தில் அதிகப் பொறுப்புடையவர்களாயிருக்கின்றார்கள். இந்தக் கடமையை நாம் நிறைவேற்றுவோம். அதிகமான தியாகத்தை நான் கேட்கவில்லை. அறியாமையில் ஆழ்ந்திருக்கும் ஆண்கள் பெண்களைப் பற்றித் தினமும் நினையுங்கள் என்றே சொல்கின்றேன். இதற்கு விசேஷத்திறமை வேண்டியதில்லை. எழுதப்படிக்கத் தெரிந்தயாரும் வேறொருவருக்குத் தாம் படித்ததைச் சொல்லிக் கொடுக்கலாம். கொஞ்சம் முயன்றால், பலனைக்கண்டு பிரமித்துப்போவீர்கள். விசேஷப் பயிற்சித் தேவையில்லை; விருப்பமுள்ளவர்கள் யாரும் இந்த ஊழியத்தை நிறைவேற்றலாம். வயது வந்தவர்கள் படிப்பதற்கெனத் தனிப் பாடப் புத்தகங்கள் இருக்கின்றன. விலை குறைவுதான். சில சங்கங்கள் இப்புத்தகங்களை இனாமாக வழங்கவும் தயாராயிருக்கின்றன. தாமதியாதீர்கள். உடனேயே வேலையை ஆரம்பியுங்கள்.

விதவையர்க்கு - - - - விடுதலை நல்குவீர்!

எதிர்பாராதது

(ப. நீ.)

கமலா எதிர்பார்க்கவில்லை. கிருஷ்ணனும் எதிர்பார்க்கவில்லை. எதிர்பாராத சந்திப்பாகிவிட்டது. கிருஷ்ணன், கமலாவைக் கண்டதும் மிகவும் ஆச்சர்யத்துடன் "கமலா! உன்னை இப்பொழுது சந்திப்பேனென்று நான் எதிர்பார்க்கவில்லை. இரண்டு மூன்று தினங்கள் தொடர்ந்தாற்போல் நீ கடற்கரைக்கு வரவில்லையென்று நண்பன் சோமநாதன் தெரிவித்தான். அதிலிருந்து நானும் வருவதில்லை. கடற்கரை பாலைவனமாகத் தோன்றியது நீ யில்லாததால். இன்று தற்செயலாக வந்தேன். உனக்கு உடம்பு இப்பொழுது சுகம்தானே?" என்று கேட்டான்.

கமலா:—இப்பொழுது கொஞ்சம் சுகம் என்று சொல்லலாம். நாளைமுதல் கலாசாலைக்கு வருவேன்.

கிருஷ்ணன்:—அப்படி உட்காருவோம் வா.

இருவரும் சிறிதுதூரம் சென்றமர்ந்தனர். கடற்கரை ரேடியோ தன் முழக்கத்தை ஆரம்பித்தது.

ஃ ஃ ஃ

கமலாவும் கிருஷ்ணனும் 'தாமஸ் மிஷன் கலாசாலை' யில் இண்டர் மீடியட் படிக்கிறார்கள்.

கமலாவுக்கு வயது 22. அவளும் அவளது விதவைத்தாயும் தான் சென்னையில் வசித்துவருகிறார்கள். அவர்களுடைய கிராமத்திலிருந்து மாதாமாதம் பணம் வருகிறது. அதைக்கொண்டு சாப்பிட்டுவருகிறார்கள்.

கமலாவும் கிருஷ்ணனும் ஆப்த நண்பர்கள். இருவரும் தினம் கடற்கரையில் சந்திப்பார்கள். சம்பாஷிப்பார்கள்; இன்பமாகப் பொழுதைப் போக்குவார்கள். இளம் வயதினரான கமலாவும் கிருஷ்ணனும் இவ்வாறு சந்தித்து வருவதன்மூலம் அவர்களது நட்பு அதிகப்பட்டதென்று கூறவேண்டியதில்லையல்லவா? அந்த நட்பு காதலாகமாறியது. ஒருவரை யொருவர் மணந்து கொள்வ

தென உறுதி பூண்டனர். இப்படி நேருமென கமலா எதிர்பார்க்க வேயில்லே.

ஃ ஃ ஃ

வயது இருபத்திரண்டாகியும் தன் கலியாணத்தைப் பற்றித் தன்னுடைய தாய் ஒன்றுமே யோசிக்காமலிருப்பது கமலாவுக்கு வியப்பையளித்தது. பிராமண வகுப்பில் புஷ்பவதியாகு முன்னரே கலியாணம் செய்யவேண்டுமன்றோ? தன் தாய் இன்னும் ஏன் பேசாமலிருக்கிருள். "ஆகவே நாமாவது இதைப்பற்றிய பேச்சை எடுத்துத்தாளுக வேண்டும்" என்று தீர்மானித்தாள். தன் கலியாணத்தைப்பற்றி தானே பேசவேண்டி நேருமென கமலா எதிர்பார்க்க வில்லே.

ஃ ஃ ஃ

"அம்மா! எனக்கு வயதாகி விட்டதே கலியாணத்தைப் பற்றி ஒன்றுமே யோசிக்காம லிருக்கிருயே ஏனம்மா?" என்று தன் தாயைக் கேட்டாள் கமலா. சிறியவர்களிடம் கலியாணம் என்ற பேச்சை எடுத்தவுடன் ஒருவித அசட்டுச் சிரிப்பும், அவர்களே யறியாத வெட்கமும் ஏற்படுவது சகஜமல்லவா? கமலா தைரியமாக இந்தக் கேள்வியைக் கேட்டுவிட்டாளே தவிர உடனே வெட்கமும் சிரிப்பும் வந்து தலே கவிழ்ந்தாள். கமலா தலே கவிழ்ந்தது, அவளது தாய்க்குப் பெரிய உபகாரமாய் இருந்தது. அப்பொழுது மட்டும் கமலா தாயின் முகத்தைப் பார்த்திருந்தால் கண்டிப்பாக பயந்தே போயிருப்பாள். அவளது முகம் விகாரப்பட்டு ஒரு விதமான பயங்கரத் தோற்றத்தைக் காண்பித்தது. உடனே அவள் சாமர்த்தியமாகப் புன்னகையை வரவழைத்துக்கொண்டு, "கமலா நானும் அதைப்பற்றித்தான் யோஜித்துக் கொண்டிருக்கிறேன்" என்ருள். அவள் கண்களில் நீர் ததும்பிற்று. அதை மறைக்கும் பொருட்டு எழுந்து சென்று விட்டாள். கமலா தன் காதலனேப் பற்றி பிரஸ்தாபிக்க வேண்டுமென்று எண்ணிளுள். ஆனல் அதை சொல்வதற்குள் தாய் தான் எழுந்து போய்விட்டாளே! கமலா இதை எதிர்பார்க்கவில்லே. தோட்டத்துப் பக்கம் சென்ற தாய் மறுபடியும் திரும்பி வந்தாள். "கமலா! பள்ளிக்கூடத்திற்கு லீவு எழுதிப்போடு. நாளே நாம் மஹாபலிபுரம் போகவேண்டும்" என்ருள்.

கமலாவுக்கு, தன் தாய் இப்படி திடீரென மகாபலிபுரம் போகவேண்டுமென்று தீர்மானித்தது ஆச்சரியத்தை அளித்தது. ஆனாலும் தாயின் வார்த்தைக்குக் கீழ்ப்படிதல் என்பது அவளது சிறு பிராயத்திலிருந்தே ஏற்பட்ட ஒரு தனி சுபாவம். காதலனை விட்டுப்பிரிய வேண்டி நேருமென கமலா எதிர்பார்க்கவில்லை.

ஃ ஃ ஃ

கட்டுச்சாதம் தயார் செய்யப்பட்டது. மூட்டை முடிச்சுகள் முடிந்தன. மகாபலிபுரம் புறப்பட்டனர்.

மகாபலி புரத்தையடைந்து அங்குள்ள சிற்பங்களை யெல்லாம் பார்த்துக் கொண்டே வந்தனர். கமலா தன் காதலனைப்பற்றி எண்ணினளே தவிர சிற்பத்தைக் கவனித்தாளில்லை. அவள், தன் தாய் சிற்பத்தைப் பார்த்து மகிழ்வதாக எண்ணினள். ஆனல் தாயோ, கமலா சிற்பத்தைப்பார்த்து இன்பமடைவதாக எண்ணினள். அவளுடைய மனதில் பெரிய பாரம் அழுத்திக் கொண்டிருந்ததை யாரறிவார்?

ஃ ஃ ஃ

இருவரும் கடற்கரையை யடைந் தமர்ந்தனர். கண்ணுக்கெட்டிய தூரம் வரை மனித சஞ்சாரமே தென்படவில்லை. கடலின் அலையை நோக்கிக் கொண்டிருந்த கமலா தன் தாயைப் பார்த்தாள். அவளது கண்களிலிருந்து நீர் தாரை தாரையாக ஒழுகிக் கொண்ருந்ததைக் கண்டு திடுக்கிட்டாள். "அம்மா! அம்மா! ஏன் அழுகிருய்?" என்ருள்.

தாய்:—கண்ணே! என்ன வென்றுசொல்வேன். உனக்கு கலியாணம் எப்பொழுது என்று கேட்டாயே..........கமலா! அடி. என் செல்வமே. நீ கலியாணமே செய்து கொள்ளக் கூடாதென்பது கடவுளின் ஆக்ஞை!

கலமா:—என்ன? கலியாணமே செய்து கொள்ள...............

தாய்:—ஆம் கலியாணமே இல்லை. இதுதான் கடவுளின் கட்டளை.

கமலா:—இது என்ன? இப்படியும் கடவுள் கட்டளையிடுவாரா? இதென்ன சாபக்கேடு?

தாய் விம்மி விம்மி அழுதாள். கமலா திக்பிரமை கொண்டு நின்ருள். சிறிது நேரம் நிசப்தம் குடிகொண்டது. கடல் தன் போக்கில் அலையைக் கிளப்பி மோதிக்கொண்டிருந்தது. ஒரு சிட்டுக்குருவி 'க்ரீச்' என்ற சப்தத்தால் நிசப்தத்தைக் கலைத்தது.

தாய்:—கமலா! என்செல்வமே: நீ விதவை. கன்னி விதவை. பகவான் உன்தலையில் எழுதிவிட்ட விதி. இது அழிக்க முடியாதது. அழிக்க இச்சமூகம் இடந்தராது; நாம் சமூகத்தால் பகிஷ்கரிக்கப் பட்டோம்; தள்ளப்பட்டோம்; உதறப்பட்டோம்; ஒதுக்கப்பட்டோம். சமூகத்தின் ஈவு இரக்கமற்ற சின்னபின்னமான கொலைக்கு ஆளானேம்.

இதைக் கூறும்போது அவளின் கண்கள் கோவைப் பழம் போல் சிவந்தன. நெஞ்சு விம்மிற்று. ஒரு பெருமூச்சு விட்டாள். இவ்வுலகத்தை எரித்து சாம்பலாக்கிவிடும்போ லிருந்தது அவளுடைய பார்வை.

கமலா பெட்டிப்பாம்பு போல் மெல்லிய குரலில், "அம்மா! எப்பொழுது எனக்குக் கலியாணமாயிற்று? கணவன் இறந்ததெப்போ? நமது சொந்த ஊர் சென்னையா?"

தாய்:—உனது 8வது வயதில் திருமணம் நடந்தது. நீர் விபத்தில் உன் கணவன் இறந்தான். அக்ரகாரம் உன் உருவைக்குலைக்க விரும்பியது. 'விதவை'என்றுநீ அறிந்துகொள்ளாமலிருப்பதற்காக நாம் சென்னை வந்தோம்.உன்னை வளர்த்தேன். படித்தாய்.கலியாண எண்ணமே தோன்ருமல் கன்னியாக இருக்கவேண்டுமென்று கடவுளை வேண்டினேன். என் எண்ணம் மடிந்தது. ஐயோ ஈசன் ஏன் இவ்வெண்ணத்தை உன் மனதில் தோற்றினுன்? என்று "ஓ"வென் றலறியவாறே கமலாவைக் கட்டிக்கொண்டாள். அப்படியே மூர்ச்சையானுள். இப்படியாகுமென கமலா எதிர்பார்த்தாளா?

ஃ ஃ ஃ

சிறிது நேரம் சென்றது. தாய் கண்விழித்தாள். 'கமலா' என்ருள். காணேம். 'கமலா' என்று உரக்கக் கூப்பிட்டாள். கமலா என்ற எதிரொலிதான் கேட்டது. 'கன்றைப் பிரிந்த தாய்' வேகமாக ஓடினுள். எதிரிலிருப்பதை அறிந்தாளில்லை. இரண்டு கைகளை

நீட்டியவண்ணம் கமலா கமலா என்று ஓடினுள். கால் இடறிற்று ஒரு கல்லில். விழுந்தாள்.

ஃ ஃ ஃ

கமலா கடற்கரையின் தென்கோடியை யடைந்தாள். "ஹே சமுத்திரமே என்னை விழுங்கு" என்று நடந்தாள். சட்டென்று அவள் மனதில் என்ன தோன்றிற்றோ தெரியவில்லை. நின்ருள். "சமூகச் சட்டத்திற்கு காதல் கட்டுப்பட்டதா இல்லையா என்பதை தெரிந்துகொள்வோம்" என்ருள்."

ஃ ஃ ஃ

சென்னைக் கடற்கரை. கமலா கிருஷ்ணனின் வரவை எதிர் நோக்கிக்கொண்டிருந்தாள். வந்து சேர்ந்தான் கிருஷ்ணன்.

கிருஷ்ணன்:—கமலா ஏன் முகம் வாட்டமாயிருக்கிறது?

கமலா:—என் மனதிலுள்ள பெரிய பாரத்தை உங்கள் முன் அவிழ்த்து விடப்போகிறேன். என் முடிவு உங்கள் பதிலில் இருக்கிறது.

கிருஷ்ணன்:—என்னை நீ நன்கறிந்திருப்பா யென்று நினைக்கிறேன்.

கமலா:—ஆம் ஆனுலும்....சொல்கிறேன் கேளுங்கள். நான் பால்ய விதவை. இதனுல் நமது காதலின் முடிவு என்னவாகும்? சமூகக்கட்டுப்பாட்டிற்கு அடங்கியதா காதல்?

கிருஷ்ணன்:—இல்லை ஒருபோதும் இல்லை. சமூகக் கட்டுப் பாட்டை விட காதல் பெரிது!

கமலா எதிர்பாராத இந்தப் பதிலைக் கேட்டு அளவற்ற மகிழ்ச்சியடைந்தாள்.

"விதவைகள் அழுது கொண்டிருக்க வேண்டும். சீர்திருத்தக் காரர்கள் சொல்லிக்கொண்டே யிருக்கவேண்டும்." இந்த சம்பிரதாயம் உடைத்தெறியப்பட்டது. தூளாக்கப்பட்டது.

காதலர் கூடினர்; களிப்பெய்தினர்.

சமூகம் என்ன சொல்கிறது?

விதவைக்கு விமோசன மணியுங்கள்

(ரு. மு. ரே. ராமச்சந்திரன், பினங்கு.)

தற்காலிக உலக முறைக்கேற்றவாறாய், நமது உள்ளம் சகல சீர்திருத்தத்திலும் மூழ்கிக் கிடக்கிறது—ஊறிக்கிடக்கிறது. இதனால் என்ன பிரயோஜனம்? செய்கையளவில் யாதாமொன்றையாவது செய்து விட்டால் அதுவே பிரயோஜனமானதாகும்.

ஏ! இந்து சமூகமே? பாழாய்ப் போன பண்டைப் பழக்க வழக்கங்கள் பல இருக்கின்றனவே! அவை ஒரு பைசாவுக்கும் உபயோகப்படாதவை; அதுவும் மேலான மாநிட ஜன்மத்தில் ஒரு சாராருக்குப் புல்லுருவியாய் முளைத்தவை. அக்கொடிய புல்லுருவி பாதுகாக்கப் படுவதை இன்னும் இந்து சமூகம் ஒழித்த பாடில்லையே? அந்தோ! உலக முன்னேற்றம் நம்மைக் கண்டு நகைக்கிறது! ஏன்? வயிற்றிலிருக்கும் "சிசு" விதவை; 1, 2, 3, 4, 5, வயதுக் குழந்தைகள் விதவை; 6, 7, 8, 9, 10, வயது மங்கைகள் விதவை; 11, 12, 13, 14, 15, 16, 17, வயதுக் கன்னிகள் விதவை; இப்படிப் படிப்படியாய் விதவை, விதவை, விதவை! எந்த ஒரு தேசத்திலும் இந்தக் கொள்ளை அநியாயம் கிடையாது. அ............ஹ............ஹா! மகா பாதக வழி; விதவை யென்னும் பேயிருட்டு வழி..................பேயும் வெருளக் கூடிய கொடிய கொள்கை வழி. இதனால், பருவ கன்னிகள் அநேக ஆயிரம் பேர் ஜன்னலும் கூட இல்லாத இருட்டுக் குகைக்குள் அடைபட்டு அவர்களின் வெள்ளை உடை தொப்பையாய் நனையும்படி கண்ணீர் உகுத்து உறக்கமின்றிச் செறிந்துச் கிடக்கிறார்கள். ஐயோ! இந்து சமூகமே? தனிப்பட்ட ஒருவன்—ஒருத்தி, காதலுக்காக என்னென்ன தீச்செயலி லீடுபடுகிறார்கள். எத்தனை கஷ்டம், எத்தனை நஷ்டம். சாதல் என்ற முடிவுக்கு வந்து குத்து, கொலை நிகழ்கின்றன. ஆனால், பல்லாயிரம் விதவை என்னும் போர்வை போர்த்தவர்களின் எண்ணங்கள் உங்களுடைய கட்டுப்பாட்டில் அடங்கிக் கிடக்கின்றன.

ஒரு இளங் குமரியின் துயரை வர்ணித்துச் சொல்ல தற்கா லிக உலகில் தகுந்த ஒரு "கவி"யிருக்க முடியா தென்றே சொல்ல லாம். எத்தன்மையதான படுக்கையும் விதவைக்குக் கூழாங் கற் பரப்பில் படுத்தது போலிருக்கிறது. கிடு கிடு வென்று தொனித்துக் கொண்டு வந்த இடி, அவள் மீது விழுந்து விட்ட வேதனை. குழந்தை வெருண்டு எழுந்து தாயைத் தாவிக் கொள்ளும்; மறு வெருட்சிக்கு இறுகக் கட்டியணைத்துக் கொள்ளும்; விதவை குழந் தைதான். கூழாங் கற்பரப்பின் மேல் உருண்டு, உருண்டு புரண்டு, புரண்டு திரேகமெல்லாம் ரணம், ஒரே வேதனை. இரண்டு கைகளை யும் மடித்து, முளங் கைகளை அன்னை வயிற்றோடு சேர்த்து குப் புற விழுந்து படுத்து, பூமியினுடைய ஆகர்ஷண சக்தி போதாது இவளும் அமுக்கிப் படுத்திருந்தாலும், கால்கள் தட தட வென்று நடுங்குகின்றன; கைகள் உடம்பைப் புரட்டும்படி வெட, வெட வென்று நடுக்குகின்றன; சுடலையில் தகிக்கும் பிணத்தின் பற்களைப் போன்று இறுக ஒட்டி நற, நற, நற, நற வென்றிருத்திக் கொண் டது. அவளுடைய நரம்புகளே வில்லாகவும் அவளுடைய சடலம் அம்பாகவும் தூக்கி யெறியப் படுகிறாள். நமக்கு ஒரு நாளிரவில் சிறிது நேரம் தூக்கம் கெட்டு விட்டால் அப்பொழுது நமக்கு எப் படி யிருக்கிறது? அந்தோ! விடியா யுக இருளில் நித்திரையின்றி வாடும் விதவைகளுக்கு விமோசனமளியுங்கள். செய்த தருமங் களை, விதவையென்ற தீயால் கருக்கிக் கொள்ளாதீர்கள்.

நமது இந்தியா விமோசன மடையும் நிலைக்கு வந்துகொண் டிருக்கிறது—துரிதமாய் சுதந்திரத்தைப் பெறப்போகிறது. இந்த வழியில் நாம் பெண்களை எப்படி வைத்துக் கொண்டிருக்கிறோம்? நமது சுதந்திரப் பாதையில் "அடிமை" என்ற சத்தம் இருக்க லாமா? சிவம் பெரிதா? சக்தி பெரிதா? என்னும் கேள்விக்கு ஆதி காலந் தொட்டு இன்று வரை விடையைக் காணோம். நமது சுத்தா னந்த பாரதியார் கூறுகிறார்: "மனிதன் சிவமயமாவான், மனுசி சக்தியாவாள்" என்று. இப்படியிருக்க, நாம் பெண்களைப் படு பாதாளக் குழியில் ஆழ்த்தி வைத்திருக்கிறோம். "சக்தி பெரிதா? சிவம் பெரிதா?" என்ற பெரும் விஷயம் சாதாரணக் கேள்வியாய் பெரும் மஹான்களிடம் போனால், கூறுவார்கள்: "இரவு இன்றி

பகல் கிடையாது. பகல் இன்றி இரவு கிடையாது" என்று. ஆகவே, சக்தியை விட்டு நாம் வெறும் சிவமாய் யாதொன்றையும் சாதிப்பது இக்கட்டு. இந்தியாவின் புகழை மங்கலாக்கிய குறைகளில், விதவை யென்னும் பெரும் குறையும் ஒன்றாகும். விதவைக்கு விமோசனமளித்து இந்தியாவை—நமது வீர பாரத நாட்டைச் செழித்தோங்கச் செய்யுங்கள்.

தாயும் தாய் நாடும்

[ஜங்கி தாஸ்]

இன்றையப் பெண்கள் நிலைமை என்ன? சுதந்திரம், தன்னம்பிக்கை முதலியன முகத்தில் ஜ்வலிக்கத் திறந்த முகத்துடன் அவர்கள் வெளியே செல்வதைக் காண்கின்றோம் அயல் நாடுகளில். அதுமட்டுமல்ல; வீட்டிலும், புருஷன் மீதும் குழந்தைகள் மீதும் அவர்களுக்கு ஒருவித, மறுக்கவோ தடுக்கவோ முடியாத அதிகாரமிருப்பதையும் காண்கிறோம். உலகம் முழுவதும் பெண் மக்கள் சங்கங்கள் ஏராளமாக இருக்கின்றன; இவற்றிலுள்ள அங்கத்தினர் தொகை அளவு மீறியது. வீட்டிலும், சமூகத்திலும், அரசாங்கத்திலும், தங்களுக்குள்ள உரிமைகளை இச் சங்கங்கள் மூலம் வற்புறுத்தி வருகின்றனர். அதிகாரம் வகிக்கும் ஆடவருடைய ஆதரவும் அனுதாபமும் மட்டுமல்ல இதன் காரணங்கள். பல பெண்களுடைய சுய முயற்சியும், தளரா ஊக்கமும் இதன் காரணங்களாகும்.

கொஞ்ச காலத்துக்கு முன் வரையிலும் மேனாடுகளிலுங்கூட பெண்களுக்கு அனேகமாக எவ்வித உரிமையு மில்லாமலிருந்தது உண்மை தான். அவர்களுக்கு சொத்துரிமையில்லை; ஓட்டுரிமை இல்லை; மிக நெருக்கடியான சந்தர்ப்பங்களிலன்றி மற்றப்படி விவாகரத்து உரிமையில்லை. இந்தக் கட்டுப் பாடுகளை யெல்லாம் தாண்டி வெளியில் வரமுயன்ற பெண்களும் ரகசிய வாழ்க்கையே வாழ நேர்ந்தது. மேரி ஆன் இவான்ஸ் என்ற பெண்மணி தான் ஒரு

சிறந்த ஆசிரியர் என்ற பெயர் வாங்குவதற்காக ஜார்ஜ் எலியட் என்ற (ஆடவர்) பெயரை வைத்துக்கொள்ள நேர்ந்தது.

அங்கு பெண் பள்ளிக்கூடங்கள் இருந்தன; ஆனால் அவை பெண்களுக்குக் கற்றுக்கொடுத்ததெல்லாம் பியானோ வாசிக்கவும், கிரந்த பாஷைகளிலொன்றை மோசமாகப் பேசவுந்தான். இதற்கு மேல் பெண்களுக்கு எதுவுந் தேவையில்லையென்று கருதினார்கள். பழைய ருஷ்யப் பழமொழியொன்றுண்டு. அது: "பெண்களின் கூந்தல் நீளம்; ஆனால் அவர்கள் மூளை குட்டை!" என்பது. அந்த நாட்களில் மேனாட்டிலுள்ளோர் இந்தப் பழமொழியை நம்பினார்கள்! உலகில் பெண்ணும் ஒரு உயரிய, தகுந்த அந்தஸ்தைப்பெற்று வாழும்படி மேனாட்டுக் கல்வி வெள்ளைப்பெண்ணைத் தயாராக்கி விட்டது. உலக நாகரீகத்துக்கு ஆடவன் எவ்வளவு அவசியமோ அவ்வளவு பெண்ணும் அவசியமென்ற நிலை ஏற்பட்டுவிட்டது ஆடவர் வாழ்க்கைத் துறைகளை ஏகபோகமாகத் தாங்களே வைத்துக் கொண்டிருப்பதையும், நாகரீகத்தை ஏக போகமாக அனுபவிப்பதையும் பெண் எதிர்த்துப் போராடுகின்றாள்.

மேனாடுகளில், பெண்களின் சுதந்திர இயக்கம் பூரண நிலைக்கு முற்றிவிட்டது. வாழ்க்கையின் எத்துறையிலும் அவர்கள் ஆடவர்களைப் போன்று சம அந்தஸ்தில் வாழ்கின்றார்கள். நீதி மன்றத்திலும், வக்கீல் உத்யோகத்திலும், பார்லிமெண்டிலும் நுழைந்துவிட்டார்கள். விளையாடுகிறார்கள், போலீஸ் உத்யோகம் பார்க்கிறார்கள், துப்பறிகிறார்கள். விவாகரத்து உரிமையிருக்கிறது. ராணுவ, விமான ஊழிய வர்க்கங்களில் புகவும் உரிமை அளிக்கப்பட்டிருக்கிறது.

மேனாட்டு நாகரீகம் கீழ்நாட்டிலும் புகுந்துவிட்டது. என்றேனும் ஒருநாள் வரத்தானே வேண்டும்? காலத்தின் போக்கைத் தடுக்கும் சக்தி உலகிலிருக்கிறதா? நாகரீகமென்னும் பெரு வெள்ளத்தில், காலைச்சுருட்டி மடக்கிக்கொண்டு அது எங்கு வேண்டுமானாலும் இழுத்துக்கொண்டு போகட்டுமென்று சும்மா இருப்பதா? அல்லது கப்பல் சுக்கானைக் கையில்பிடித்துக் கப்பலை ஓட்டுவதா? இந்தமாதிரி ஒரு நெருக்கடியான காலத்தில் நாம் வாழ்

ந்து வருகின்றோம். இந்த வெள்ளப்பெருக்கை இக்கால மனிதர் எப்படி சமாளிக்கிறார் என்பதைப்பொறுத்தே இந்தியாவின் எதிர்கால மிருக்கிறது.

ஒரு நாட்டின் அல்லது அதன் கலையின் நாகரீகத்தை, அந் நாட்டிலுள்ள வீடுகளின் நிலைமையிலிருந்து தெரிந்துகொள்ளலாம் தொட்டிலையாட்டும் கைதானே உலகையும் ஆள்கின்றது? இந்தத் தொட்டில்களெல்லாம் நமது வீடுகள்; இந்தத் தொட்டில்களில் தேசங்கள் சீராட்டி வளர்க்கப்படுகின்றன. ஒரு தேசத்தை வளர்த்து முன்னுக்குக் கொண்டுவருவது யார்? ஆள்வது யார்? கல்வி புகட்டுவது யார்? குழந்தைகளின் குணங்களை ஆரம்பத்தில் உருப்படுத்துவது யார்? குழந்தைக்குப் பாலூட்டுவது தாயல்லவா? வளரும் குழந்தையைக் குளிப்பாட்டி உணவூட்டுவது தாயல்லவா? அட்சரங்களையும் எழுதவாசிக்கவும் கூட்டல் கழித்தல் போடவும் சொல்லிக் கொடுப்பது யார்? தேசத்துக்கு உயிர்கொடுப்பது தாய் குழந்தையுடன் கொஞ்சி விளையாடுவது தாய்! இளம்பிராயத்திலிருக் கும் மனித சமூகத்துக்குக் கல்விபுகட்டுவது தாய்! ஒரு பையனைப் படிப்பித்தால் ஒரு தனி நபர்தான் கற்றவனாகிறான்: ஆனால், ஒரு பெண்ணைப் படிப்பித்தாலோ, ஒரு குடும்பம் முழுமையும் படித்த குடும்பமாகிறது.

நமது நாட்டில் படிப்பில்லாதவர் தொகையில் பெரும்பகுதியி னரும் பெண்கள்தான். மூட நம்பிக்கைகளும், பழக்க வழக்கங்க ளும் அவர்களை ஆட்டிவைப்பதற்குக் காரணம் இதுதான்—ஒரு தேசத்தின் முற் போக்குக்கு முக்கிய தடைக் கற்கள் இவை. எந்த தேசத்திலும் பெருவாரியான மக்கள் ஏகோபித்து முன்னேற வேண்டுமானால், அந்த தேசப் பெண்களின் அறியாமை ஒழிக்கப் படவேண்டும்.

இந்தியாவிலே, தாய்மார்களுடைய உழைப்பெல்லாம் வீட் டைச் சுற்றித்தான்; வீட்டின் நான்கு சுவர்களினுள்ளேதான் அவர்கள் தங்கள் வாழ்க்கையை நடத்துகிறார்கள். எனினும், உண் மையான, கடமையுணர்ந்த அன்புடைத் தாயாராக விளங்குவது தங்களுக்கு அழியாப் புகழைத் தரும் என்பதை அவர்கள் மறந்து

விடுகின்றார்கள்; வேறு எந்தக்காரியத்தையும்விட, தனது குழந்தைகளை சரியானபடி பயிற்றுவிப்பதுதானே முக்கியமானது? இதை ஒரு கடினமான, வெறுப்பான வேலையாக நினைக்கும் எந்தப்பெண்ணும் மணம் செய்துகொள்வதில் அர்த்தமில்லை.

மதம், ஒழுக்க விதிகள், சமூக அந்தஸ்து, இந்தியாவிலுள்ள சட்ட முறைகளுங்கூட ஆடவருக்கு உலக சொத்துக்களில் பூரண உரிமையை அளிக்கின்றன; இதனால் பெண்கள் பொருளாதார சுதந்திரமற்று விட்டார்கள். சுயநம்பிக்கையும் நிரந்தரப் பாதுகாப்பும் ஏற்படாமல் என்றும் ஆண்களையே எதிர்பார்த்தவர்களாய் அவர்கள் கஷ்டப்படுவதற்குக் காரணம் இது தான். இன்னும் அவர்கள் ஆடவரின் தட்டு முட்டுச் சாமான்கள் தான்; வேறல்ல.

புருஷனுக்குப் பயந்தும், தந்தைக்குப் பயந்தும், சமூகத்திற்குப் பயந்தும் இன்னும் எதிர்கால உலகத்துக்குப் பயந்துங்கூட இந்தியப் பெண்கள் வாழவேண்டியிருக்கிறது. இன்னும் மனைவியரை அடிக்கும் வழக்கம் புருஷர்களில் (நியாயமான) விளையாட்டாக இருக்கவில்லையா! புருஷர்களின் துன்பங்களில் அவர்களுக்குப் பங்களிப்பதில்லை; அவர்களுடைய தொழில் துறைகளில் பெண்களையும் ஈடுபடுத்துவதில்லை; வெளி உலக வாசனையே எட்டும்படி செய்வதில்லை. குழந்தைகளுடன் விளையாடவும், அயல் வீட்டாருடன் சண்டை போடவும், உணவு சமைக்கவுமே அவர்கள் வீட்டில் விட்டுவைக்கப் படுகிறார்கள். புருஷர்கள் தங்கள் மனைவியரை வீடு எனும் கூண்டிலடைத்து, உணவு கொடுத்து, ஆடையுடுத்தி நாய், பூனை கிளி வளர்ப்பதுபோல் வளர்த்து வருகிறார்கள். இன்னொரு பட்சி கிடைக்கும்போது அவர்கள் முதல் பட்சியை விட்டு மற்றொன்றிடம் செல்வது சர்வ சாதாரணந்தான். பெண்களுக்கு இவ்வுலகில் ஏற்பட்டுள்ள வாழ்க்கை மணவாழ்க்கை ஒன்றுதான். அவர்களுடைய அறிவு அபிவிருத்தியடைவது பாவமென்றும் தேவையற்றதென்றும் கருதப்படுகிறது. இந்தியப் பெண்களில் பெரும்பாலானவர்களுடைய நிலைமை இதுதான்.

பல நூற்றாண்டுகளாகப் பெண்கள் அடக்கு முறைக்கும், அரை குறைச் சிறை வாழ்க்கைக்கும் ஆட்படுத்தப்பட்டிருப்ப

தால், அவர்கள் ஜீவநாடி பலமிழந்து, இயற்கை சக்திகளுங் குன்றிப்போய் விட்டன. வீட்டுக்கு வெளியே நிகழும் நிகழ்ச்சிகளில் வெகு சில இந்தியப் பெண்கள் மட்டுமே கலந்து கொள்வதற்குக் காரணம் இதுதான்.

பெண்கள் ஆண்களுடன் சமமாக நின்று உழைத்தால்தான் நாடு முன்னுக்கு வரமுடியு மென்பதை நாம் அறிய வேண்டும். அநேகமாக உலக தேசங்கள் அனைத்தும் இவ்வுண்மையை உணர்ந்து விட்டன. ஆனல் இதை உணர இந்தியா இன்னும் நீண்டதூரம் செல்ல வேண்டும். நமது தாய்மார்களும் சகோதரிகளும் ஆடவர் ஆதிக்கம் மிகுந்த உலகிலல்லவா வாழ்ந்து வருகிருர்கள்?

ஒரு பத்து வருஷத்துக்கு முன் வரையிலும், சைனு, துருக்கி, பெர்ஷியா முதலிய தேசத்துப் பெண்கள் நிலைமை நம் நாட்டுப் பெண்கள் நிலைமையைப் போன்றே இருந்து வந்தது. எனினும், காலத்தின் தேவைக் கேற்றவாறு அவர்கள் தங்கள் குறுகிய கொள்கைகளையும், வைதீக வழக்கங்களையும் உதறித் தள்ளிவிட்டார்கள். அந்த நாடுகளில் நடைபெறும் அரசியல் அல்லது சமூகக் கிளர்ச்சிகளிலே பெண்களும், ஆண்களோடு சமமாக நின்று உழைப்பதிலேயே தங்கள் 'விமோசனம்' இருப்பதாகக் கருதுகிருர்கள்.

இந்தியப் பெண்களும் தங்கள் மீது சுமத்தப்பட்டுள்ள தடைகளை உதறித் தள்ளி விட்டு தேசீய வாழ்வில் கௌரவமான ஸ்தானத்தை எவ்வாறு பெற முடியும் என்பதைக் கவனிப்போம்.

இந்தியப்பெண்கள் ஒதுங்கிநிற்கிருர்கள்; அல்லது ஒதுக்கப்படுகிருர்கள். அறிவுடைமையில் அவர்கள் பின்னிற்கிருர்கள் என்பதா இதன் காரணம்? இது சரித்திரத்துக்கு ஒவ்வாதது. சரோஜினிதேவி, கமலாதேவி சட்டோபாத்தியாய, கமலா நேரு, இவர்களெல்லாம் இந்தியப்பெண்மணிகளன்ருே? இந்தியப்பெண்கள் பொதுவாழ்க்கையில் பொறுப்பான எந்தக் கடமையையும் ஏற்றுக் கொள்ளமுடியுமென்பதை இவர்கள் நிரூபித்திருக்கின்ருர்களல்லவா? ஒவ்வொரு பெண்ணும் தனது சக்தியை உணர்ந்து, பழைய அவ நம்பிக்கையை உதறித் தள்ளி முன்வந்தாலன்றி

சமூகத்திலும், வீட்டிலும், நாட்டிலும் அவளுக்கு சம அந்தஸ்து கிடைப்பதற்கில்லை.

பெண்மக்கள் பிரச்னையைப் பெண்மக்களே தீர்க்கவேண்டும். படித்த பெண்கள் (அவர்கள் தொகை மிகச்சிறியது) தங்கள் சகோதரர்களுடன் கலந்து அவர்கள் துன்பங்களை நிவர்த்திக்க முயற்சிக்கவேண்டும்.

இந்தியத் தாய்மார்களுக்கு இன்று பெரும் பொறுப்பு இருக்கின்றது. அவர்களிடையே தூங்கிக்கொண்டிருக்கும் சக்திகளை விழிக்கச்செய்து இந்த முயற்சிக்காகத் திரட்டவேண்டும். வீட்டுக்கு ராணியாக விளங்கும் தாய் தனது பங்கையும் எடுத்துக் கொள்ளவேண்டும். நமது சகோதரிகளிற்சிலர், தங்கள் சக்தியை விடுதலை, முன்னேற்றம், என்ற பக்கத்தில் செலுத்தி, வெற்றியின் பக்கம் நாட்டைத் திருப்பவேண்டும்.

பத்திராதிபர் குறிப்புகள்.

"முட்டுக்கட்டை"

பெண்களே தங்களின் இன்னல்களை உணர்ந்து அதை நீக்க வழிகோல முயலும் இக்காலத்தில் சிலர் இடையூறாக நிற்க முற்படுவது எவ்வளவு பேதமைத் தனம்! பெண்களின் அந்தஸ்து உயர வேண்டுமென்று சீர்திருத்தக்காரர்கள் கூறியதைக் கேட்டபோதெல்லாம், எங்கோ ஓரிருவர் கூக்குரலிடாமலிருப்பதில்லை. பெண்கட்காக ஆடவர் பேசும்போதே கூக்குரல் பயனளிக்கவில்லையென்பதை யறிந்தும், பெண்கட்காக, அவர்களே பேச முன் வந்தபொழுது முட்டுக்கட்டையிட முற்படுவது வியக்கத்தக்கதன்றோ?

"குறுக்கே நிற்காதீர்கள்"

ஜலந்தர் கன்யா மகா வித்யாலயத்தின் பட்டமளிப்பு விழாவில் தலைமை வகித்துப் பேசுகையில், ஐக்கிய மாகாணப் பிரதிநிதி சபை

அங்கத்தினர் ஸ்ரீமதி உமா நேரு,

> புருஷர்களுக்கும், ஸ்திரீகளுக்கும் சம உரிமை ஏற்படவேண்டும்; ஸ்திரீகளின் முன்னேற்றத்திற்காகச் செய்ய முற்படும் சட்டங்களுக்கு ஆடவர்கள் குறுக்கே நிற்கக்கூடாது. ஸ்திரீகளுக்கு சொத்துரிமை வேண்டுமென்ற சட்டத்தை அவர்கள் ஆதரிக்க வேண்டும். இந்திய ஸ்திரீகள் வலுவுடன் நின்று தங்கள் சமூக ராஜீய உரிமைகளுக்காகப் போராட வேண்டும்

என்று குறிப்பிட்டிருக்கிறார். ஸ்ரீமதி உமா நேரு குறுக்கே நிற்க வேண்டாமென்று ஆடவர்களைக் கேட்டுக் கொள்ளுகிறார். அதே சமயத்தில் ஸ்திரீகள் வலுவுடன் நின்று போராட வேண்டும் எனக் குறிப்பிட்டதும் கவனிக்கத்தக்கதாகும்.

வரதக்ஷிணை

திருவனந்தபுரத்தில் கூடிய மாதர் மகா நாட்டில் பின் வரும் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது:

> வரதக்ஷிணை வழக்கத்தை எதிர்க்க ஒவ்வொரு மெம்பரும் தன்னால் ஆனதைச் செய்ய வேண்டுமென்றும், அதை எதிர்த்துப் பிரசாரம் செய்ய ஒரு திட்டம் தயாரித்து, இந்தக் கொடிய வழக்கம் ஒழிவது வரை சகல வகுப்பாரிடையிலும், இத்திட்டத்தைத் தயக்கமின்றி நிறைவேற்ற வேண்டுமென்றும் இம்மகாநாடு தீர்மானிக்கிறது.

வரதக்ஷிணை வழக்கம் எவ்வளவு இடையூறுகட்குக் காரணமாக இருக்கிறதென்று மக்கள் ஓரளவு உணர்ந்து வருகிறார்கள். பெண்கள் தீவிரமாக எதிர்க்கிறார்கள். வரதக்ஷிணைக் கொடுமையால் நொடித்த குடும்பங்கள் ஏராளம். இக்கொடுமையால் திருமணமே ஆற்றப்பெறாத கன்னியர் காளையர் அநேகர். வரதக்ஷிணை கொடுப்பதற்கியலாது தவிக்கும் தங்கள் தந்தையின் பரிதாபகரமான நிலைமையைக் காணச் சகியாது உயிர் நீத்த கன்னிப் பெண்கள் எண்ணற்றோர். மகாநாட்டில் உணர்ச்சியோடு இத்தீர்மானம் நிறைவேறியிருக்கிறது. அனுபவத்தில் உறுதியுடன் கையாளப் படுமாயின் பெண்களின் துயரம் நீங்குமென்பதில் ஐயமுண்டோ?

இதற்தும் எதிர்ப்பா?

கொழும்புச் சட்டசபையில் டாக்டர் டி சவுசா என்பவர் "வரதக்ஷிணை வாங்குவதும், கொடுப்பதும் சட்டவிரோதம்" என்று ஒரு மசோதா கொண்டுவந்தார். இதைப் பிரேரேபிக்கும்பொழுது அவர்

> வரதக்ஷிணை நிர்ப்பந்தத்தால் எத்தனையோ குடும்பங்கள் அழிந்து போய்விட்டன. கலியாணமென்பதே இப்பொழுது வரதக்ஷிணைக்காகத்தான் நடக்கிறது. காதலுக்காக அல்ல

என்று கூறியிருக்கிறார். இந்தப் பிரரேபணைக்கு சாதகமாக 9ம் பாதகமாக 9 ஓட்டுகளும் கிடைத்தன. தலைவர் தமது ஓட்டைத் தீர்மானத்திற்குப் பாதகமாகக் கொடுத்து பிரரேபணையைத் தோற்கடித்திருக்கிறார். இப்படிச்செய்த தலைவரின் செய்கை மிகவும் வெறுக்கத்தக்கதாக இருக்கிறது. பெண்கட்கு அடிமைத் தளைகளைப் பூட்டும் எண்ணற்ற விஷயங்களில் இதுவும் ஒன்று. இது வாழ்க்கையைச் சீர் குலைக்கும் வழக்கம். சமூகத்தை நாளுக்குநாள் சின்ன பின்னப்படுத்தும் வழக்கம் வரதக்ஷிணையாகும். எந்தக் காரணத்திற்காகவோ நவக்கிரகங்களும் அவைகளோடு தலைவரும் சேர்ந்து தசக்கிரீடமாக எதிர்த்தார்களென்பது புலப்படவில்லை. மொத்தத்தில் இவர்கள் சமூகத்திற்குப் பெருந் துரோகத்தையே செய்திருக்கிறார்களென்பதில் சந்தேகமில்லை. இந்தத் தீர்மானம் தோற்கடிக்கப்படும்போது சட்டசபை அங்கத்தினர்களே வரதக்ஷிணை வாங்கி தேர்தல் செய்திருக்கிறார்களென்றும் அதனால்தான் இத்தீர்மானம் இந்தக் கதியாயிற்றென்றும் தீர்மானத்தைக் கொண்டு வந்தவர் குறிப்பிட்டிருக்கிறார். என்ன கூறினாலென்ன? தீர்மானம் தோற்கடிக்கப்பட்டுவிட்டது.

:: நிகழ்ச்சிகள் ::

விதவா விவாகக் கணக்கு

1938 செப்டம்பர் மாதம் நடை
பெற்ற விதவா விவாகங்கள்

சாதி வாரியாக

பிராமணர்	...	88
க்ஷத்திரியர்	...	35
அரோடர்	...	43
அகர்வால்	...	50
காயஸ்தர்	...	24
ரஜபுத்திரர்	...	13
பிறர்	...	32
மொத்தம்		285

மாகாண வாரியாக:—

பஞ்சாப்	...	81
ஐக்கியம்	...	47
மத்தியம்	...	27
பம்பாய்	...	15
வங்காளம்	...	58
அஸ்ஸாம்	...	23
மதறாஸ்	...	11
பிகார் ஒரிசா	...	23
மொத்தம்		285

அக்டோபர் மாதத்தில் நடை
பெற்ற விதவா விவாகங்கள்

சாதி வாரியாக:—

பிராமணர்	...	85
க்ஷத்திரியர்	...	38
அரோடர்	...	40
அகர்வால்	...	69
காயஸ்தர்	...	30
ரஜபுத்திரர்	...	25
பிற வகுப்பு	...	34
மொத்தம்		321

பிராமண வகுப்பில் விதவா விவாஹம்

இந்தியாவில் பல இடங்களில் வசித்து வரும் ஒரியா பிராமணர்கள் தங்கள் சமூகத்தில் வருந்திக் கொண்டிருக்கும் விதவைகளைக் கவனியாமலிருந்து வந்தனர். லாவுமுண்டா வாகட், சாயிவாலி, கஞ்சஹாம், முதலிய இடங்களில் பாலிய விதவைகள் மிகவும் வருத்தத்தோடு வாழ்க்கை நடத்தி வந்தனர். பலவிடங்களில் கர்ப்பச் சிதைவும், தற்கொலைகளும் நடந்திருக்கின்றன; இவற்றையெல்லாம் பார்த்தும் ஒரியா பிராமண சமூகம் இரக்கம் கொள்ளாதிருந்தது. இந்தத் தருணத்தில் சரபாவாலி எனும் இடத்திலிருக்கும் பிராமண அன்பர் ஜாதிப் பகிஷ்காரம் போன்ற கொடுமைகளையும் லட்சியம் செய்யாமல், பாலிய விதவையான தனது மகளை நல்ல ஒழுக்க சீலரான ஒரு பிராமணருக்கு மணம் செய்து கொடுத்துவிட்டார்.

அனாதைப் பெண்கள் ஆசிரமம்

திருவனந்தபுரத்தில் இவ்வாசிரமம் நிறுவப்பட்டிருக்கிறது. மகாராணி சேதுபார்வதி பாயின் ஞாபகார்த்தமாக இதற்கு சேது பார்வதிபாய் ஸ்திரீ தர்மாலயம் என்று பேரிடப்பட்டிருக்கிறது; 16 வயதுக்கு மேல் 40 வயதுக்குள் பட்ட பெண்களுக்கு உணவு, உடை, இட வசதி யளிக்கவும், புருஷர்களோ சுற்றத்தாரோ அநியாயமாகப் புறக்கணிக்கும் பெண்களுக்குச் சட்ட மூலமாகப் பரிகாரந் தேடவும்,

தொழிற் கல்வி கற்பிக்கவும், வைத்திய உதவி யளிக்கவும் இந்த தர்மாலயம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. தற்சமயம் பன்னிரண்டு பெண்களைச் சேர்த்துக் கொள்ள வசதியுண்டு. பிரதம சிகிச்சை, நர்ஸிங், தையல், போட்டோ பிடித்தல், சமையல் முதலிய தொழில்கள் கற்பிக்கப்படும். ஸ்ரீமதி R. ரங்கநாயகி இதன் காரியதரிசி.

காதலுக்குப் பலி

தலைச்சேரியில் கைத்தேரி நம்பியார் என்பவருடைய மகளும் (18 வயது) அவருடைய மருமகனும் (25 வயது) ஒருவரை யொருவர் காதலித்தனர். ஆனால் சாதி வழக்கப்படி அவர்கள் மணஞ் செய்து கொள்ளக் கூடாதாம். எனவே; பெற்றோர்கள் அவர்களை வீட்டை விட்டுத் துரத்திவிட்டார்களாம். இருவரும் காட்டுக்குச் சென்று, சுட்டுத் தற்கொலை செய்து கொண்டதாகத் தெரிகிறது.

ஒழுக்கக் குறைவான மணமுறை

சிர்மூர் சமஸ்தான மக்களிடம் விநோதமான மணமுறை யொன்று நீண்ட நாளாக வழக்கத்திலிருந்து வருகிறது. அதன்பிரகாரம் ஒருவன் ஒருபெண்ணை மணக்க விரும்பினால் அப்பெண்ணுக்கு 'ரீட்' என்னும் கிரயப் பணத்தைக் கொடுக்க வேண்டும். ஆனால் அப்பெண் தன் கணவனிடம் திருப்தியுறாவிடில் அப்பணத்தை அவனிடம் கொடுத்து மணத்தை ரத்துசெய்துவிட்டு வேறொருவனை மணந்துகொள்ளலாம். இம்மணமுறை மீது சர்க்கார் வரியும் விதித்திருக்கிறார்கள். இம் மணமுறை ஒழுக்கவீனத்திற்கு அஸ்திவாரமா யிருக்கிற தென்றும், அதன்மீது சர்க்கார் வரிவிதிப்பது அம்முறையை ஆதரிப்பதாகவிருப்பதால் அவ்வுரிமையையும் மணமுறையையும் நீக்க வேண்டுமென்றும் பிரஜாமண்டல் சங்கத்தார் முயற்சித்து மகஜரொன்றும் அனுப்பியிருக்கின்றனர்.

மாதர் மகாநாடு

தமிழ்நாட்டு மாதர் மகாநாடு நவம்பர் 19உ கோவில் பட்டியில், திருநெல்வேலி ஜில்லா செஷன்ஸ் ஜட்ஜின் மனைவி பீகம் மீர் அமிருதீன் தலைமையில் நடைபெறும்.

சினிமாவில் குடும்ப ஸ்திரீகள்

பிரபல வடநாட்டு சினிமா நடிகை ஸ்ரீமதி சாந்தா ஆப்தே ரேடியோவில் செய்த பிரசங்கத்தின் ஒரு பகுதி வருமாறு:—

சமூகத்தில் நல்ல உயர்ந்த ஸ்திதியிலுள்ளவர்கள், குடும்ப ஸ்திரீகள் ஸினிமா நடிப்பை ஒரு தொழிலாக ஏற்கலாமா வென்று என்னை அடிக்கடி கேட்கிறார்கள். ஏன் செய்யக் கூடாதென்பது எனக்கு விளங்கவில்லை. நல்ல ஒழுக்கமுள்ள ஸ்திரீ ஸினிமாவில் நடிக்க வந்தாலும் சரி, இல்லாவிட்டாலும் சரி தம் ஒழுக்கத்தை நிலைநிறுத்திக் கொள்ளக் கூடும். வம்பளப்புப் பேர்வழிகள் வீண்வதந்திகளைக் கட்டி விடுவது பெரிய தடையாகவிருக்கிற தென்பது எனக்குத் தெரியும். இத்தகைய ஆபாசமான தூஷணைகள் கெட்ட நோக்கத்துடனேயே கிளப்பப்படுகின்றன. பல சந்தர்ப்பங்களில் அசூயையினாலேயே இவை வெளிப்படுகின்றன.

விருத்திக்கு வரும் ஒரு ஸினிமா நடியின் கவுரவத்தைக் கெடுக்கும் உத்தேசத்துடனேயே இந்த வீண் வம்புகளும், தூஷணைகளும் கிளப்பப்படுகின்றன. தனது கற்பைப் பெரிதாக நினைக்கும் ஒரு ஸ்திரீ இத்தகைய தாக்குதலி விருந்து தன்னைப் பாதுகாத்துக் கொள்ளக் கூடும். பாதுகாத்துக் கொள்ளவும் வேண்டும்.

மிராஜில் 'சாரதா' சட்டம்

மிராஜ் (ஜூனியர்) சமஸ்தான அஸம்பிளியில் இளமை மணத்தடை மசோதா ஏகோபித்து நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

பெண் போலீஸ்

ஹைதராபாத் சமஸ்தானத்தில், அரசியல் கிளர்ச்சியைச் சமாளிப்பதற்காகப் பெண் போலீஸ் படை அமைக்கப்பட்டிருக்கிறது. சென்னையிலும், பெண் கைதிகளைச் சிறைகளுக்கு அழைத்துச் செல்லப் பெண் கான்ஸ்டபில்களை நியமிக்குமாறு திவான்பகதூர் ஜி நாராயணசாமி செட்டியார் கவர்ன்மெண்டுக்குச் சிபார்சு செய்திருந்தார். அதையொட்டி, தற்காலிகமாகப் பெண் வார்டர்களை நியமிக்க கவர்ன்மெண்டார் உத்திர விட்டிருக்கின்றனர்.

தற்கொலை முயற்சி

சேலம் ஜில்லாவில் மள்ளூர் கிராமத்தைச் சேர்ந்த பெருமாயி என்ற பெண் தனது குழந்தையைக் கொல்லவும் தான் தற்கொலை செய்யவும் யத்தனித்ததாக அவள் மீது வழக்குத் தொடரப்பட்டது. தான் குற்றவாளி தானென்றும், தனது மாமியார், புருஷன் முதலியோர் தன்னைக் கொடுமைப்படுத்தியதாயும், உணவு கொடுக்க மறுத்ததாயும், இதனால் வெறுப்புக் கொண்டு தற்கொலை செய்ய முயன்றதாகவும் கோர்ட்டில் சொன்னாள். முதலாவது குற்றத்துக்கு ஒரு நாள் சிறைத்தண்டனையும் இரண்டாவது குற்றத்துக்கு 100 ரூபாய் ஜாமீன் கொடுக்கும்படியும் ஜட்ஜ் உத்தரவிட்டார்.

பெண் ரெஜிஸ்திரார்

மிஸ் அன்னம்மா எனும் பெண்மணி கொச்சியில் ஜில்லா ரெஜிஸ்திராராக நியமிக்கப்பட்டிருக்கிறார்.

பெண்களும் அஹிம்சையும்

மகாத்மா காந்தியடிகள் ஸ்திரீ நிருபர் ஒருவரின் கடிதத்திற்குப் பதிலளிக்கையில் குறிப்பிட்டதாவது:—

அஹிம்சா தர்மத்தை நன்கு கடைப்பிடித்து ஒழுகக் கூடியவர்கள் ஸ்திரீகள் தான் என்பது என் துணிபு. ஆனால் ஸ்திரீகளுக்கு ஊக்கமூட்ட ஒரு ஆடவனை எதிர்பார்ப்பானேன்? அஹிம்சா தர்மத்தைத் தீரமாகப் பற்றுவதற்கு ஆண்களை விடப் பெண்களே அதிகத் தகுதி வாய்ந்தவர்கள். தன்னலத்தியாகம் புரிவதில் என்றென்றைக்கும் ஆண்களை விடப் பெண்களே உயர்ந்தவர்கள். மிருக சுபாவத்தில் தான் பெண்களை விட ஆண்கள் உயர்ந்தவராவார். இது தான் எனது நம்பிக்கை.

பம்பாய் ஸ்திரீகள் மகாநாடு

பம்பாயில் கூடிய ஸ்திரீகள் மகாநாட்டில், ஸ்திரீ புருஷர்களது

ஊதிய விகிதத்தில் உள்ள வித்தியாசத்தை ஆட்சேபிப்பதாகவும், விதவா விவாகத்திற்குள்ள அசௌகரியங்களைச் சீக்கிரமாகப் போக்க வேண்டுமென்றும், பெண்கல்வி விஷயங்களில் உடனுக்குடன் கவனம் செலுத்த வேண்டுமென்றும், ஹிந்து லாவை அடியோடு மாற்றி ஹிந்து ஸ்திரீகளின் அசௌகரியங்களைப் போக்க வேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது.

விழுப்புரத்தில் விதவா விவாகங்கள்

சென்ற புரட்டாசி 12உ புதன் கிழமை தென்னற்காடு ஜில்லா விழுப்புரம் தாலூகா பூஞ்சேலி குப்பம் கிராமத்தில், பகண்டை கிராம முன்சீப் கொண்டா ரெட்டியார் தலைமையில், கொண்டல் ராய ரெட்டிக்கும், 16 வயதுள்ள தனலெட்சுமி அம்மாளுக்கும், கொண்டா ரெட்டிக்கும், 14 வயதுள்ள பாலம்பாள் அம்மாளுக்கும் விவாகம் சிறப்பாக குலாசார சடங்குகளுடன் நடைபெற்றது. பலர் தம்பதிகளை வாழ்த்தினர்.

பெண்களுக்கு சம உரிமை

"இந்தியப் பெண்களுக்கு ஆடவரைப் போன்ற சம அந்தஸ்து அளிக்கப்படாதவரை அரசியல் சுதந்திரத்தைப் பற்றிப் பேசுவதில் பயனில்லை. சமூகத்தின் ஆரோக்கிய வாழ்வுக்கும் வளர்ச்சிக்கும் ஆணும் பெண்ணும் மன ஒற்றுமையாக ஏகோபித்து இயங்க வேண்டியது அவசியம். ஆடவருக்கும் பெண்டிருக்குமிடையே பூரண சமத்துவம் ஏற்படுவதே சமூக வாழ்விற்குச் சரியான அடிப்படையென்பதுஎன் நம்பிக்கை" என்று பம்பாய் 'ஸோஷியல் ரிபார்மர்' பத்திரிகை ஆசிரியர் ஸ்ரீ கே. நடராஜன் சிதம்பரம் அண்ணாமலை யூனிவர்ஸிட்டி ஐக்கிய சங்கக் கூட்டத்தில் நிகழ்த்திய பிரசங்கத்தில் குறிப்பிட்டார்.

சர்வதேசப் பெண்கள் மகாநாடு

சர்வதேசப் பெண்களின் கூட்டு மகாநாடு வருகிற ஜூலை 8-ம் தேதி கோப்பன் ஹேகனில் நடைபெறும். முந்தின மகாநாடு 1935-ல் இஸ்தான்புல்லில் நடைபெற்றது.

ரெஜிஸ்திரேஷனின் அவசியம்

பிறநாடுகளிலிருப்பது போன்று நம் நாட்டிலும் கல்யாணங்களை ரெஜிஸ்தர் செய்வதன் அவசியத்தை விளக்கி ஸ்ரீமதி ராதாபாய் சுப்பராயன், விசாகபட்டணம் மாதர் சங்கத்தின் ஆதரவில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் பேசினர். லார்டு வின்ஹாவின் மணம் ரெஜிஸ்தர் செய்யப் படாததால், அவரது புத்திரர் பிரிட்டீஷ் பிரபுக்கள் சபையில் ஸ்தானம் பெறமுடியாது போய்விட்டது என்பதை உதாரணமாக எடுத்துக்காட்டினர்.

ருஷ்யவீரப் பெண்மணிகள்

சோவியத் யூனியன் ஆண்களுக்கும் பெண்களுக்கும் சம சுதந்திரம் அளித்தபின் பெண்கள் ஆண்களோடு எல்லாத் துறைகளிலும் போட்டியிட ஆரம்பித் துள்ளார்கள். அடுப்பூதும் பெண்கள் ஆண்களைவிட ஆயிர மடங்கு அபூர்வச் செயல்களைச் செய்துகாட்டி உலகிலே உன்னத ஸ்தானத்தைப்

பெற்றுள்ளார்கள். சோவியத் யூனியனில் எல்லாத் துறைகளிலும் பெண்கள் உழைத்து வந்தாலும் ஆகாயக் கப்பலோட்ட அதிக ஆர்வத்துடன் முன் வந்துள்ளார்கள். 1934ம் ஆண்டு ஜுலை 16-ல் இவாடோகி மோவ் என்னும் பெண்மணி 8,100 மீட்டர் அதாவது கிட்டத்தட்ட 5 மைல் உயரம் ஆகாயக் கப்பலில் பறந்து அங்கிருந்து பேரச்சூட் என்னும் குடையுடன் பூமியிற்குதித்தார். K. கமினீவா என்னும் பெண் 3,000 மீட்டர் உயரத்திலிருந்து பேரச்சூட் உதவியினுல் பூமியிற் குதித்தார். ஆனுல் 1936ல் சோவியத் யூனியனிலுள்ள 25 வயதிற் குட்பட்ட 6 இளம் பெண்கள் ஆகாயக் கப்பலினின்று 22,000 அடி உயரத்திலிருந்து, எவ்வித பிராண வாயு கருவியும், பேரச்சூட் என்னும் குடையுமின்றி மாஸ்கோ நகரிற்கு அருகேயுள்ள கிம்கி என்னும் நகரில் எவ்வித காயமுமின்றி பூமியில் குதித்து உலகிலே உயர்ந்த கௌரவத்தையும் முதன்மை ஸ்தானத்தையும் பெற்றுள்ளார்கள்.

பொருட்காட்சி

பெரிய நகரங்களிலும், கிராமங்களிலும்தாய் சிசு சம்ரட்சணை சம்பந்தமாகக் கையாள வேண்டிய முறைகளை விளக்கும் பொருட்காட்சிகள் ருஷ்யாவில் அமைத்திருக்கிறுர்கள். கர்ப்ப ஸ்திரீகள் செய்ய வேண்டிய முறைகள், உண்ண வேண்டிய உணவு வகைகள் கர்ப்ப காலத்தில் கையாளவேண்டிய சுகாதார முறைகள் பலவற்றையும் சுவரொட்டி விளம்பரம், போட்டோப் படங்கள் மூலம் விளக்குகின்றனர்.

ருஷ்யத் தாய்மார்களுக்கு வசதி

தாய்மார்களையும் குழந்தைகளையும் பாதுகாக்க ஸோவியத் ருஷ்யாவில் தனி விதி யேற்பட்டிருக்கிறது. கர்ப்ப ஸ்திரீகளுக்கு மூன்று முதல் நாலு மாதம் வரை முழுச் சம்பளத்துடன் லீவ் கொடுக்க வேண்டும். பணவுதவியும் பிரத்தியேக உணவு வசதியும் உண்டு. பாலூட்டும் தாய்மார்கள் மூன்று மணி நேரத்திற்கொரு முறைத் தங்கள் சிசுக்களுக்குப் பாலூட்டச் செல்லலாம்.

கமால் அட்டா டர்க் காலமானுர்

துருக்கி சர்வாதிகாரியும், நவீனத் துருக்கியின் 'தந்தை'யுமான கமால் அட்டா டர்க் நவம்பர் 10௳ காலமானுர், அவர் தமது ஆட்சி காலத்தில், சமூகத் துறையில் பல சீர்திருத்தங்களைத் தைரியமாகக் கொண்டு வந்தார். பலதார மணத்தடை, முகமூடி விலக்கு, மணத்திற்கு முன் ஆரோக்கிய ஸர்டிபிகட் பெறுதல் முதலிய பல சட்டங்களை அவர் இயற்றினுர். துருக்கிப் பெண்கள் நாகரீகத் துறைகளில் ஈடுபட்டு முன்னேறியதற்குக் காரண புருஷர் அவரே நவம்பர் 19௳ யன்று 'கமால் தின'மாகக் கொண்டாட வேண்டுமென்று ராஷ்டிரபதி சுபாஷ் சந்திரபோஸ் ஒரு அறிக்கை வெளியிட்டிருக்கிறுர்.

சமூக சீர்திருத்தப் புத்தகங்கள்.

"மாதர் மறுமணம்" சந்தாதாருக்கு சகாயம்.

கைம்பெண்ணின் கண்ணீர்.

இது ஆசிரியர் கே. வி. எஸ். வாஸ் அவர்களால் எழுதப்பட்டு மாதர் மறுமண சகாய சங்கத்தாரால் வெளியிடப்பட்டுள்ளது. இதில் விதவைப் பெண்கள் படுந்துயரமும் அதற்குச் செய்யவேண்டிய பரிகாரமும் தெளிவு படக் கூறப்பட்டுள்ளன. விதவா விவாகம் சுருதி—யுக்தி— அனுபவபூர்வமாக ஒப்புக்கொள்ளப்பட்டதென்பதற்கு ஏராளமான ஆதாரங்கள் காட்டப்பட்டிருக்கின்றன. இக்கட்டுரை முதலாவது பரிசு பெற்றதாகும். விலை அணா ஒன்று. தபாற் செலவு வேறு.

மான நஷ்ட வழக்கு.

இது பெண்ணுக்குப் பணம் வாங்கிச் செய்ததற்காக பெண்ணின் தம்பி மைனர், மேஜரான பிறகு தன் குடும்பத்திற்கு அவமானம் வந்துவிட்டதென்று கோர்ட்டில் வழக்கிட்டு நீதிபெற்றதாக எழுதப்பட்ட ஒரு சிறு நூல். கோர்ட் நடவடிக்கையும் மலைவிழுங்கி முத்தப்ப செட்டியாரின் விசாரணை விவரங்களும் தீர்ப்பும் படிப்பவர்க்கு வெகு உற்சாக மூட்டக் கூடியன. விலை அணா ஒன்று. தபாற் செலவு வேறு.

சொர்ணவல்லி.

இதில் அடுத்தாள் வேலையின் அவஸ்தை, பிரிந்த காதலர்களின் பெருந் துன்பம், தீர்த்த யாத்திரைக்குப் பெண்கள் சென்று படும்பாடு, பச்சிளம் பெண்கள் விதவையராக்கப்படும் கஷ்டங்கள் முதலிய பகுதிகளும், விதவைப் பெண் வைக்கும் ஒப்பாரியும் படிப்பவர் உள்ளத்தை உருக்கிவிடுவது திண்ணம். உபந்யாசங்களும் மேற்கோள்களும் சந்தர்ப்பத்துக்கேற்ற இனிய பாட்டுக்களும் நிறைந்து விளங்கும். எளிய அழகான நடையில் அமைந்துள்ளது. இதன் விலை ரூ. 1—0—0. "மாதர் மறுமணம்" சந்தாதாருக்கு மட்டும் 0—12—0. தபாற் செலவு வேறு.

அமிர்தவல்லி மாலை.

இது நகரத்தார் பெருமையையும் காவிரிப்பூம்பட்டினத்தின் சிறப்பையும் விளக்குகிறது. பால்யப் பெண்களை மணம் செய்வதும் அதை விதவையாக்கிக் கண்ணீர் வடிப்பதும் எவ்வளவு கொடுமை யென்பதையும், அதனாலேற்படும் இன்னல்களையும் படிப்பவர் மனத்தில் பசுமரத்து ஆணிபோல் பதியச் செய்யும்படி அமைந்துள்ளது. யாவரும் எளிதில் பாடக்கூடிய இனிமையான அம்மானைப் பாட்டில் பாடப்பட்டிருக்கிறது. விலை 0—4—0. 'மாதர் மறுமணம்" சந்தாதாருக்கு மட்டும் 0—3—0. தபாற் செலவு வேறு

மானேஜர், மாதர் மறுமணம் ஆபீஸ், காரைக்குடி.

REGD. No. M. 3603.

சிறந்த புத்தகங்கள்.

மாதர் மறுமணப் பாடல் திரட்டு.

இது ஒரு சிறந்தபாடல் புத்தகம். இதில் 27-பாடல்கள் அடங்கியுள்ளன. இலக்கிய பாடல்களும், புதுவகையான மெட்டுப் பாடல்களும் நிறைந்திருக்கின்றன. 64-பக்கமுள்ள இப்புத்தகத்தின் விலை இரண்டணாதான். தபாற்கூலி வேறு.

ஜீவகாருண்யத் திருக்குறள்.

"வள்ளுவர் பாட்டின் வள முரைக்கின் வாய்மடுக்கும்" என்று புகழப்படும் திருக்குறளிலிருந்து ஜீவகாருண்ய சம்பந்தமான 20 குறளைப் பொறுக்கிப் பெரிய எழுத்தில் பொழிப்புரையுடன் அச்சிடப் பட்டிருக்கிறது. பள்ளிக்கூட மாணவர் பயில்வதற்கு மிக இன்றியமையாதது. விலை அணா அரை. மொத்தமாக வாங்கினால் விலை சகாயமாகத் தரப்படும். தபாற்கூலி வேறு.

மாதர் மறுமணம்.

இப்பெயர் கொண்ட அழகிய புத்தகம் மகிபாலன்பட்டி திருவாளர் மு. சின்னையா செட்டியாரவர்களால் இயற்றப் பெற்றது. அழகான நடை. நகரத்தார் சமூகத்திற்கு மாதர் மறுமணம் எவ்வளவு அவசியமென்பதற்குக் காரணங்களைப் பசுமரத்தாணியெனப் பதியும்படி எழுதியிருக்கிறார்கள். உதாரணமாகக் கூறப்படும் எழு கதைகள் வியக்கத்தக்கனவாகும். அழகான புத்தகம் விலை 0—4—0 "மாதர் மறுமணம்" சந்தாதாருக்கு 0—3—0 தபாற்சிலவு வேறு.

காசில்லாமல் உபதேசம்.

பஞ்சாட்சர உபதேசம் செய்வதற்கு ஆடம்பரமும் அனாவசியமான தடபுடலும் வேண்டியதில்லை யென்பதற்கு வேண்டிய காரணங்கள் இதில் விளக்கப்பட்டிருக்கிறது. அதோடு தண்ணீர் மந்திரமும் இதில் சொல்லப்பட்டிருக்கிறது. விலை அணா ஒன்று. தபாற் கூலி வேறு.

மாதர் மறுமணம் பென்ஸில்.

"விதவை மணமே விடுதலை அளிக்கும்" என்னும் வாக்கியம் தமிழிலும் ஆங்கிலத்திலும் பொறிக்கப்பட்டுள்ள அழகான பென்சில். நல்ல நிறம். சுகமாக எழுதக்கூடியது. இந்தியாவில் செய்யப் பெற்றது.

விலை பென்சில் 1-க்கு	0—0—6
டஜன் 1-க்கு	0—5—0
குரோஸ் 1-க்கு	3—6—0

தபாற்செலவு வேறு.

Printed and Published by S. MURUGAPPA for the Mathar Marumana Sahaya Sangam at Kumaran Power Press, Karaikudi.
Editor: M. Maragathavalli.